

தங்கவேலுவின்

# ஹாஸ்ய வெடிகள்

ரதி பதிப்பகத்தாரின்

# தங்கவேலுவின்

# ஹாஸ்யவெடிகள்

முதற்பதிப்பு 15-5-55

விலை 8 அணா

உரிமைபெற்றது.

# புகுமுன்னே

பிரபல்ய காமிக் நடிகர் தங்கவேலு இன்று கதா நாயகனுக்கு உரிய சம அந்தஸ்தில் பட உலகில் பவனி வருகிறுர், அவரது ஒவ்வொரு படத்திலும் ஒவ்வொரு வசனமும், ஒவ்வொரு வகையான சுவை கொட்டித் தருபவை. அஸவகளை ஒருங்கே கூட்டி, உங்கள் முன்னர் பஞ்சாமிர்தப் படையலாக்கி யுள்ளோம். இன்புறுங்கள்.

- பதிப்பகத்தார்.

# இதே போன்ற பிற

★ சிம்மக்குரலோன் கணேசனின் கர்ஜனைகள் ... 8 அணா

★ இல்லறஜோதியில் அனார்கலி வசனம் ... ... 2 அணா

★ பத்மினியின் காதல் கணைகள் ... ... 8 அணா

# தங்கவேலுவின்
# ஹாஸ்ய வெடிகள்

---

## கதா நாயகி படத்திலே........

(நாடக மானேஜர் பஞ்சநாதம்! அவ்வேஷம் தான் தங்கவேல் ஏற்றிருக்கிறர்............இனி அவரது ஹாஸ்ய வசனங்களை அனுபவியுங்கள்........)

(உதவி மேனேஜர் உபயோகம் உள்ளம் உருகி தனது பசிக் குரலை எழுப்புகிறான்)

உபயோகம் : டேய் ! மிச்சம் மீதி இருந்தா இங்கே கொஞ்சம் கொண்டுவந்து போடடா !

(தனது கையில் சோற்றை வாங்கி வைத்துக்கொண்டிருக்கும் போது—மற்றொரு கை வருகிறது. அதுதான் மேனேஜர் பஞ்சநாதத்தின் பசியுள்ள கை! உபயோகம் பஞ்சநாதத்திற்கு பாதியைக் கொடுக்கிறன். பஞ்சநாதம் சாப்பிடும்போது மற்றொரு பையன் பசி என்று கேட்கவே— பஞ்சநாதம் பையனுக்குப் பாதியைக் கொடுக்கிறன். பையன் பஞ்சநாதத்தின் கையை ஒரு சோறு கூட விடாமல் நக்குகிறன். இதைக்கண்ட பஞ்சம் பரிதாபமாக......... பையனிடம்...

பஞ்சம் : டேய்! எங்கப்பா...கையை நான் போயி கழவிக்கிட்றேன்டா! நீ ஏண்டா சுத்தப்படுத்துறே? "கல்லைத்தான்...... மண்ணைத்தான்... காய்ச்சித்தோன்... குடிக்கத்தான்...கற்பித்தானு? அல்லது பணத்தைத்தான்— எனக்குத்தான்...தந்துதான் ரட்சித்தானு?

(கான்ராக்டரும்—உபயோகமும் தனிமையில் பேசுகின்றனர்)

கன்ராக்டர் : வணக்கம்!

உபயோகம் : வணக்கம்!

கான் : இதுதானே கணபதி நாடகசபா?

உப : ஆமா!... நீங்க யாரு?

கான் : நான் நாடகத்துக்கு கான்ராக்ட் பண்ண வந்திருக்கேன்! மேனேஜரைப் பார்க்கணும்!

உப : அப்படீங்களா? அவரு இப்பத்தான் பேங்குக்கு போயிருக்காரு! உட்காருங்க! அஞ்சு நிமிஷத்துலே வந்துடுவாரு! காரிலே தான் போயிருக்காரு! டேய் அஞ்சு வளசல்! அய்யாவுக்கு சேர் எடுத்துப் போடுடா!

(உபயோகம் உற்சாகத்துடன் பஞ்சநாதத்தீடம் போய்)

உப : மேனேஜர் சார்! எழுந்திருங்க! ஒருவன் நாடகத்துக்கு கான்ராக்ட் பேச வந்திருக்கான்! சீக்கிரம் புறப்படுங்க! புறப்படுங்க சார்!

பஞ்சம் : அப்படியா வர்றேன்! ஒரு கோட்டு ஏதாவது...... அந்தப் பெட்டியிலே பாரு!

உப : சீக்கிரம் போட்டுக்கிட்டுப் புறப்படுங்க! அய்யோ...... அதுலே கூட கிழிஞ்சிருக்கே! இந்தாங்க துண்டு! மேலே போட்டு மூடிக்கங்க!

(அஞ்சு வளசல் பஞ்சநாதத்தின் பின்னுல் ஹாரன் அடித்துக் கொண்டே போகிருன்! பஞ்சநாதம் காரில் இருந்து இறங்கியது போல் நடிக்கிருன்)

பஞ்சம் : டிரைவர்! காரை ஷெட்டிலே நிறுத்து! வண்டியிலே நெய் டின்னும்— அரிசி மூடையும் இருக்கு! கொண்டு போயி வை! டேய் பசங்களா! உங்களுக்கு பொங்கலன்னைக்கு வடை பாயாசத்தோட சாப்பாடு! இந்தாய்யா கணக்குப்பிள்ளை! நம்ம ஹீரோயிணி இந்திராணி 500 ரூபா கேட்டாள்! கொடுத்துட்டு ரசீது வாங்கி வை!

(என்று பெரிய பணக்காரனைப்போல் பேசிக்கொண்டே கான்ராக்டரிடம்)

வாங்க! உட்காருங்க! உட்கார்ந்துட்டீங்களா? டேய் அஞ்சு வளசல்! அய்யாவுக்கு காபி வாங்கிட்டு வா! (அஞ்சு வளசல் போதல்) உங்களை எங்கேயோ பாத்தமாதிரி இருக்கே! டில்லியிலே இருந்து பத்து நாள் நாடகம் நடத்துறதுக்கு 5000ரூபாய்க்கு இப்பத் தான் செக் வந்தது! அதே தேதியிலே பம்பாயிலேயும் நடத்து றதுக்கு கேட்டிருக்காங்க! ஒரே நீயூஸன்ஸா போச்சு! டேய்! அஞ்சு வளசல்! எய்யா காபி வாங்கப் போனவன் ஹோட்டல வைச்கிருன்! உபயோகம்! கலராவது வாங்கிட்டு வாயா! சரி! டக்கு டக்குன்னு விஷயத்தை முடிங்க! எனக்கு ஒத்திகை இருக்கு!

காண்: ஏமாந்தனூர் மாட்டுச் சந்தையிலே ஏழுநாள் நாடகம் நடத்தணும்!

உப: ஜனங்கள் வருவாங்களா?

காண்: பின்னே...மாடுகளா வரும்?

பஞ்சம்: இந்தப் புகையிலையை வைச்சுக்கிட்டு சொல்றேன்! ஒங்க காரியம் சக்ஸஸ்! (Success) டேய் வெத்திலை பாக்காவது வாங்கிட்டு வாடா!

உப: தரித்திரம் பிடிச்ச பயல்கள்!

காண்: சாப்பாடு, ஜாகை, போக்கு வரத்துச் செலவு எல்லாம் என் பக்கம்! ஆனல் எங்க ஊருக்குப் போக ரயிலோ—பஸ்ஸோ—பிளசரோ கிடையாது!

உப: இந்தியாவுக்குள்ளேதானே இருக்கு!

காண்: பின்னே சிலோன்லேயா இருக்கு! கட்டை வண்டியிலேதான் போகணும்!

பஞ்: சரி! கட்டை வண்டியையே கப்பலா நினைச்சிக்கிடுறோம்!

உப: இதுமட்டுமென்ன? பாராசூட்டாகவே நினைச்சுக்கிடுறோம்!

பஞ்: ஒரு நாடகம் ஒண்ணுக்கு 100 ரூபா கொடுத்துடுங்க!

காண்: 100 ரூபாயா! இதென்ன கண்ணையா கம்பெனின்னு நினைச்சுக் கேட்குறீங்களா?

உப: கண்ணையா கம்பெனியா இருந்திருந்தால் 1000 ரூபா கேட்டிருப்போம்! இது கணபதி நாடக சபா!

காண்: நாடகம் ஒண்ணுக்கு 25 ரூபா தர்றேன்!

பஞ் : அய்யய்யோ... அது காணுதுங்களே...

கான் : செலவெல்லாம் நினைச்சுப் பாருங்க !

பஞ் : எங்க தொழிலையும் கொஞ்சம் நினைச்சுப் பாருங்க !

கான் : ஒங்க கும்பலுக்கு ஒரு வேளை சோறுக்கே...... ஒரு மூட்டை அரிசி வேணுமே !

பஞ் : சரி அதுவும் வேண்டாம் ! இதுவும் வேண்டாம் ! 50 ரூபாயா வைச்சு அட்வான்ஸ் கொடுங்க !

கான் : சரி, இந்தாங்க அட்வான்ஸாக பத்து ரூபா !

உப : பத்து ரூபா காணுதுங்களே...

பஞ் : காணுட்டா இந்தப் புகையிலையை வாயிலே போடுய்யா ; ஊளராமல் இருக்குறதுக்கு!

(கான்ராக்டர் போன பிறகு, பஞ்சநாதம் அஞ்சு ரூபாயை ஒருவனிடம் கொடுத்து)

பஞ்சம் : இந்தாய்யா ...அஞ்சு ரூபா ! யோ...எய்யா கண்ணுலே ஒத்துறே? இது சம்பளம் இல்லைய்யா! இந்த அஞ்சு ரூபாயைக் கொண்டுபோயி காய்கறி வாங்கிட்டு மீதியை கொண்டுவாயா !

ஒருவன் : மீதியைக் கொண்டு வரனுங்களா ?

உப : அட போங்கப்பா ! சொன்னபடி செய்யுங்கப்பா !

பஞ்ச : சமயற்காரனை எங்கேயா? (சமையற்காரனிடம் அஞ்சு ரூபாயைக் கொடுத்து) இந்தாய்யா! அஞ்சு ரூபாய்க்கு அரிசி வாங்கிட்டு வந்து பசங்களுக்கு சீக்கிரம் ஆக்கிப்போடுய்யா! போ!

(இச்சமயம் இந்திராணி வந்து)

இந்திராணி : மேனேஜர் சார்! மேனேஜர் சார்!

உப : எம்மா... மேனேஜருக்கு என்ன வைச்சிருக்கே?

இந்தி : மேனேஜருக்கும்—எனக்கும்தான் பேச்சு!

உப : அப்போ கண்ஜாடையாவது காட்டு புரிஞ்சுக்கிட்றேன்!

இந்தி : மேனேஜர் சார் ! எனக்கு அவசரமா ஒரு அஞ்சு ரூபா வேணும் !

உப : அவனே கஞ்சிக்கு பஞ்சா பறக்குறான்! உனக்குப் பஞ்சாமிர்தம் கேட்குதோ ?

பஞ்ச: இந்திராணி! நீ என்ன... எப்பப் பார்த்தாலும் ஒரே மாதிரியா இருக்கே? கம்பெனி இருக்குற நிலைமை உனக்குத் தெரியாதா? இப்ப எதுக்கு அஞ்சு ரூபா?

இந்தி: விளையாட! கம்பெனிக்கு வந்து ஐந்து வருஷம் ஆகுது! ஒரு நல்ல சாப்பாடு சாப்பிட்டது கிடையாது! கண்ணுக்கு மை கிடையாது! முகத்துக்கு பேஷ் பவுடர் கிடையாது! உடுத்திக்கிட ஒரு சேலையைத் தவிர — மறுசேலை கிடையாது!

பஞ்ச: உங்களுக்காக வீட்டை வித்தேன்—வாசலை வித்தேன், நகையை வித்தேன்—நட்டை வித்தேன்! எவனுவது வாங்குனுன்னு என்னையும் விற்கத் தயார்! இதெல்லாம் எதுக்கு? நாடகத்துக்காக!

இந்தி: அதெல்லாம் எனக்குத் தெரியாது!

பஞ்சம்: நானும் அஞ்சு வயசுலே பால பார்ட்டு! ஆறு வயசுலே மைனர் பார்ட்டு — ஏழு வயசுலே ஸ்த்ரி பார்ட்டு — எட்டு வயசுலே செக்கண்ட் பார்ட்டு—ஒன்பது வயசுலே ராஜபார்ட்டு — பத்து வயசுலே மெயின் பார்ட்டு — பதினேறு வயசுலே கிளை பார்ட்டு— பன்னிரெண்டு வயசுலே கிழவன் பார்ட்டு—பதிமூன்று வயசுலே கெட் அவுட்டு? உங்களுக்காக என் உயிரையே விட்டேன்? நீங்க முன்னேறுன பிறகு கண்ணை மூடலாம்னு பார்க்குறேன்.

இந்திராணி: கையிலே பணம் இருந்தால்தான் மூச்சு வரும்!

மூச்சு இருந்தால்தான்—பேச்சுவரும்! பேச்சு இருந்தால்தான் நடிப்பு வரும்! இனிமேல் நான் பணம் கொடுத்தால்தான் நடிப்பேன்!

பஞ்சம்: இந்திராணி! கொஞ்சமும் வஞ்சகம் இல்லாத என் நெஞ்சை திறந்து காட்டுகிறேன்! என்னை வேதனைப்படுத்தாதே!

(இச்சமயம் நடிகை குமுதம் அஞ்சு ரூபாயை பஞ்சநாதத்திடம் கொடுக்கிருள்)

மஞ்சம்: ஏதம்மா?

குமுதம்: வீட்டிலே இருந்து அனுப்பி இருக்காங்க! அம்மா —அவசரமா புறப்பட்டுவரச் சொல்லி இருக்காங்க! எனக்கு அஞ்சு ரூபா போதும்?

பஞ்சம்: (குமுதம் கொடுத்த அஞ்சு ரூபாயை வாங்கி) இந்தாய்யா! உபயோகம்! இதை அந்த அம்மாகிட்டே கொடுத்து சமாதானப்படுத்துய்யா!

உபயோகம்: (இந்திராணியிடம்) இந்தாம்மா! (கணக்கனிடம்) அஞ்சு ரூபா ! எழுதிக்கய்யா !

* * *

## ( ஏமாந்தனூரில் )

("லட்சுமிகாந்தன்" நாடகம் ஆரம்பமாகிறது..)

( உபயோகமும்—பஞ்சமும் பெண் வேஷத்தில் நடிக்கின்றனர் )

உபயோகம் : அடியே கமலம் ! இன்னும் உள்ளே என்னடி செய்யுறே !

பஞ்சம் : பொட்டு வைச்சிக்கிட்டு இருக்கேண்டி !

உபயோகம் : சீக்கிரம் வாயேண்டி !

பஞ்சம் : இதோ வந்துட்டேண்டி !

(பஞ்சம் பெண்ணைப்போல் நடந்து வருதல்)

ஏண்டி...இந்த வயசுப் பருவத்திலே காலா காலத்திலே கல்யாணம் செய்யாட்டா நாமும் பண்டரிபுரம் போகவேண்டியது தானா ?

உபயோகம் : ஏண்டி அங்கே யெல்லாம் போகணும் ?

(இச்சமயம் கதவை தட்டும் சப்தம் கேட்கிறது)

அடியே ! யாரோ வர்ராங்கோடி !

பஞ்சம் : நான் போய் பாத்துட்டு வர்றேண்டி !

(கதவை திறந்ததும்—இன்ஸ்பெக்டர் வருதல்)

இன்ஸ்பெக்டர் : யார் நீங்க ?

பஞ்சம் : நாங்க நாங்கதான் !

இன்ஸ்பெக்டர் : நீங்க நீங்கதான் ! அது தெரியுது !

ஒங்க பெயர் என்ன ?

உபயோகம் : என் பெயர் ஆர். கமலம்.

இன்ஸ் : அப்படின்னா ?

உபயோகம் : இரங்கூன் கமலம்.

இன்ஸ் : உன் பெயரென்ன ?

பஞ்சம் : சி. கமலம் !

இன்ஸ் : அப்படீன்னா ?

பஞ்சம் : சிமக் கமலம் !

இன்ஸ் : இதுக்கு முன்னே எங்கே இருந்தீங்க ?

உபயோகம் : இரங்கூன்லேதாங்க இருந்தோம் !

இன்ஸ் : இங்கே வந்து எத்தனை நாள் ஆகுது ?

பஞ்சம் : டொன்டி டேஸ் (Twenty days) ஆகுதுங்க !

இன்ஸ் : (சிரிப்பு)

உபயோகம் : சரியாய்ச் சொல்லேண்டி ? டொண்டி பைவ் டேஸ் ஆகுதுங்க ! (Twenty Five days)

இன்ஸ் : நீங்க ரெண்டுபேரும் சொல்றதே ஒண்ணுக்கு ஒண்ணு வித்தியாசமா இருக்கே ?

பஞ்சம் : இவ தாங்க டைரி எழுதுகிறது !

உபயோகம் : இவ தாங்க சொல்றது !

இன்ஸ் : அது இருக்கட்டும் ! இந்த லட்சுமிகாந்தன் இங்கே வந்தானா ?

பஞ்சம் : அந்தப் பாவி பயலைப்பற்றி பேசாதிங்க !

இன்ஸ் : ஏன் ?

பஞ்சம் : அவன் எங்க நகையெல்லாம் எடுத்துக்கிட்டு ஒரே ஓட்டமா ஓடிட்டான் !

இன்ஸ் : உங்களைப் பார்த்தா.........ஏமாந்தவங்க மாதிரி தெரியலையே ?

பஞ்சம் : இப்ப நீங்க இருக்கீங்க ! அடிக்கடி இங்கே வர்றீங்க ! அதுபோலதான் அந்தப் பாவியும் வந்தான் ! அவன் காரிலே இருந்து வர்றதும்—கண்ணாடியும்—கோட்டும் போட்டுக்கிட்டு வந்து உட்கார்றதும்—அவன் கிட்டே உட்கார்ந்து பேசாதடி அவனைப் பார்த்தா ப்ளாட்பாரம் ஆசாமி மாதிரி தெரியுதுன்னு எத்தனையோ தடவை சொல்லியும் இவள் கேட்கலே ! கடைசியிலே நகையை எடுத்துக் கிட்டு ஒரே...ஓட்டமா கோயே கோயின்னு போயிட்டான் !

இன்ஸ் : அப்படியா ?

உபயோகம் : அடியே ? அவரை உட்காரச் சொல்லுடி !

பஞ்சம் : ஆமாண்டி ! வாங்க ! உட்காருங்க ! என்ன உட்காரக் கூட மாட்டேங்குறீங்க ?

இன்ஸ்: உங்களைப் பாத்தா பொம்பளைங்க மாதிரி தெரியலையே? பெண்களுக்கு உண்டான சங்கோஜமே இல்லையே? ஒரு பாட்டுப் பாடு?

பஞ்சம்: பாட்டா? நான் ஒரு பாட்டுக்கே 9000 ரூபாய் கேட்பேன்...... அய்யோ......

இன்ஸ்: சும்மா பாடம்மா!

பஞ்சம்: பாடட்டுங்களா? (கதற ஆரப்பித்தல்)

இன்ஸ்: பக்கத்திலே உட்காரலாம்லே?

பஞ்சம்: உட்காரலாம்! என்னயவே பாக்காதீங்க! எனக்கு வெட்கமா இருக்கு!

இன்ஸ்: சரி! பாடு!

பஞ்சம்: (மீண்டும் கதற ஆரம்பித்தல்)

இன்ஸ்: கமலம்! இவள் இதுக்கு முந்தி எங்கேயாவது செக்கு ஒட்டிக்கிட்டு இருந்தாளா?

உபயோகம்: அவ இப்பத்தாங்க! சங்கீதத்துக்கே அஸ்திவாரம் போடுறாள்!

இன்ஸ்: சரி! கட்டிடத்தை எழுப்பச் சொல்!

பஞ்சம்: (பழையபடியும்) பாட ஆரம்பித்தல்

இன்ஸ்: இது பாட்டா?

உபயோகம்: கமலம்! எச்சி—பிடி!

இன்ஸ்: எச்சி பீடியா?

பஞ்சம்: மேலே பிடிச்சு பாட்றதுக்கு எச்சி பிடி—

இன்ஸ்: கீழே பிடிச்சு பாட்றதுக்கு துண்டு பீடியாகும்? சரி! எப்படியாவது பாடு!

உபயோகம்: அவள் என்னைவிட நல்லா ஆடுவாங்க? அவளுக்கு நாட்டியம் தான் நல்லா வரும்!

இன்ஸ்: அப்படீன்னு ஆடச் சொல்லு—பாக்கலாம்!

பஞ்சம்: ஆடட்டுமா?

(முரட்டுத்தனமாக ஆடுதல்)

இது ஆட்டமா? இப்ப ஆட்றேன் பாருங்க!

(அனுமாரைப் போல் ஆடுதல்)

(ரஸிகர்கள் கையை தட்டுகின்றனர்)

(நாடகம் முடிகிறது)

* * *

## (சென்னையில் கணபதி நாடக சபா)

உபயோகம் : சார் ! அன்னிக்கு நான் சொன்னேனே...... அந்தப் பொண்ணு இது தான் சார் !

பஞ்சம் : (மஞ்சுளாவைப் பார்த்துவிட்டு) இவுங்க நடிக்குறதா ? சே...சே...

உப : ஏன் சார்...நம்ம செலக்ஷன் சார் !

பஞ் : சரி ! அழைச்சுட்டு வந்துட்டீங்க ! வேண்டாம்னு எப்படிச்சொல்றது ? மூக்கும்—முழியும் இருக்க வேண்டிய இடத்திலேதான் இருக்கு !

மஞ்சுளா : சார் ! நான் நல்லா நடிப்பேன் சார் ! எனக்கு நடிக்கனும்னு ரொம்ப ஆசை !

பஞ்ச : ஆசை இருந்தால் மட்டும் போதாது ! ஆற்றல், அறிவு, திறன் இவை அத்தனையும் இருக்க வேண்டும் ! குமுதா ! நம்ம கம்பெனி சட்ட திட்டத்தை யெல்லாம் சொன்னியா? நீ எங்கே சொல்லி இருக்கப்போறே ?

குமுதம்: (இந்திராணியிடம் மஞ்சுளாவை அழைத்துச்சென்று அறிமுகப்படுத்துதல்) இவுங்கதான் எங்க கம்பெனிக்கு ஹீரோயினி! மிஸ். இந்திராணி.

மஞ் : வணக்கம் !

இந்தி : வாம்மா ! இந்தக்கம்பெனிக்கு ஒரு தூண்தான் பாக்கி ! நீயாவது வந்தியே தூக்கி நிறுத்த !

பஞ் : (ஒருவனிடம்) டேய்......கூப்பிட்டா என்னுகூட கேட்கக்கூடாதோ ? வாயைத் திறந்து பேசேண்டா ! ஏண்டா அனுமார் மாதிரி இருக்கே ? என்று அவனது வாயில் அடித்தல்) என்னடா இது ?

உப : பொரிங்க !

பஞ்ச : பொரி ஆகுற வரைக்கும் விட்ருனுங்களா ? அசல் பச்சரிசி ! தவுடு இருக்கிற இடத்துலே கூட இந்தப்பசங்களே விடக் கூடாது ! பிசைஞ்சு திண்ணுடுவானுங்க ! பொறுக்குய்யா !

* * *

## ஒத்திகை சமயம்.

(ஒத்திகை மீண்டும் ஆரம்பமாகி நடந்துகொண்டிருக்கும்போது மஞ்சுளா மட்டும் மேனேஜருக்குத் தெரியாமல் வரிசையில் வந்து சேர்ந்து ஆடி முடிந்ததும்)

பஞ்சம்: ரயில் போன பிறகும் கையை இறக்கமாட்டே போலிருக்கே.

மஞ்சுளா: நீங்கதானே சார்கர்டன் விர்ற வரைக்கும் கையை இறக்கக்கூடாதுன்னு சொன்னீங்க.

பஞ்சம்: அது நேத்து!

மஞ்சுளா: இன்னிக்கு மாத்தீட்டிங்களா? எனக்குத் தெரியாது சார்!

பஞ்சம்: அது எப்படித் தெரியும்? ஒன்பது மணிக்கு வர வேண்டியவள் பத்து மணிக்கு வந்திருக்கே! எனக்குத் தெரியாதுன்னு நினைச்சியா?

மஞ்சுளா: தயவு செய்து மன்னிச்சுக்கங்க சார்!

பஞ்சம்: என்ன மன்னிப்பு? ஆர்வம் இல்லாத தொழிலும்—அடக்கம் இல்லாத பெண்ணும் இருந்து எதுக்கு? எல்லாத்துக்கும் ஒரு சட்டம்ஞ...உனக்கு மட்டும் ஒரு சட்டமா?

மஞ்சுளா: அதுதான் மன்னிப்பு கேட்டுக்கிட்டேனே சார்!

பஞ்சம்: நீ செய்த குற்றம் மன்னிக்க முடியாதது.

மஞ்சுளா: நிறுத்துங்க சார். நிர்வாகத்துக்கும் நிதானம் வேண்டும்! கலைக்காக நான் என்னுடைய தன்மையை இழப்பதா? எதையும் பேசலாம் என்ற எண்ணம் தன் கண்ணைத்தானே ஆப்ரேஷன் செய்தது மாதிரி, நான் கெஞ்சிக்கேட்டேன். அதை உங்களால் அறிய முடியவில்லை.

பஞ்சம்: கெட் அவுட். (கோபத்துடன்)

(மஞ்சுளா வெளியேறுகிறாள்)

இதுகளை வைச்சு நாடகக் கம்பெனி நடத்றைவிட நாலு மிருகங்களை வைச்சி சர்க்கஸ் கம்பெனி நடத்திடலாம்!

* * *

டிரைவர்: (கணக்கனிடம் மஞ்சுளா அம்மாவைப்) பார்க்கணும்.

கணக்கன்: ஒத்திகை நடக்குது! டு அவர்ஸ் வெயிட் பண்ணுங்க.

டிரைவர் : இந்த பேக்கை மஞ்சுளாம்மா மறந்து போயி காரிலே வைச்சுட்டுப் போயிட்டாங்க ! இதை அவுங்ககிட்டே கொடுக்கணும்.

தில்லை : (நடிகை) கணக்குப்பிள்ளை !

கணக்கன் : குடிக்கிறது கூழ் ! கொப்பளிக்கிறது பன்னீர் ! போட்றது தோழி வேஷம் ! இதுலே அதிகாரம் வேறே !

தில்லை : ஏதாவது தபால் இருக்கா ?

கணக்கன் : தபாலா ? எழுதுனுத்தானே வரும் !

டிரைவர் : (தில்லையிடம்) அம்மா ! உங்களுக்கு மஞ்சுளாம் மாவைத் தெரியுமா ?

தில்லை : தெரியுமே ! என்ன ?

டிரைவர் : இந்த கேன் பேக்கை மஞ்சுளம்மா மறந்துபோயி வதனத்தின் காரிலே வச்சுட்டுப் போயிட்டாங்க ! இதை அவுங்க கிட்டே கொடுக்ணும் !

தில்லை: மஞ்சுளாம்மா கேன் பேக் வதனத்தின் காருக்கு எப்படி போச்சு ?

டிரைவர் : அதைப்பற்றி உங்களுக்கு என்னம்மா ?

தில்லை : அப்படியா ? வதனத்தின் காரிலே மஞ்சுளாவின் கேன் பேக் ! வதனம்—மஞ்சுளா—வதனம்.

(சந்தேகிக்கிருள்)

எலியா இருந்தாலும் புலியை பிடிச்சுட்டாளே...பிடிச்சாலும் பிடிச்சா...புளியங்கொம்பைப் பிடிச்சா !

(என்று சொல்லிக்கொண்டே ஓடும்போது பஞ்சத்தின் மேல் மோதி...இருவரும் கீழே விழுகின்றனர்.

பஞ்சம்: பார்த்து வரக்கூடாது ? இன்னும் கொஞ்சம் தவறி இருந்தால் என் நிலைமை என்ன ஆகுறது ? பெண்களுக்கு அடக்கம் இருக்கணும்னு சொல்வாங்க ! என் அடக்கத்தை எல்லாம் அடக்கம் பண்ணிட்டியே ! (பேக்கைப் பார்த்துவிட்டு) என்ன அது !

தில்லை : இது வேற விஷயம் !

பஞ்சம் : அதைத்தான் சொல்லேன் !

தில்லை . இது மஞ்சுளாவின் கேன் பேக் ! கோடீஸ்வரர் வதனத்தின் காரிலே இருந்ததாம் !

பஞ்சம் : கோடீஸ்வரர் வதனமா? அங்கே எப்படிப்போச்சு?

தில்லே : அவுங்க ரெண்டுபேரும் காதலிக்குறுங்க?

பஞ்சம் : நிஜமாவா ?

தில்லே : ஆமா... அவுங்க ரெண்டுபேரும் காரிலே போனதை நானே பார்த்தேனே! எச்சிலையிலே வைர மோதிரம் கிடச்சது மாதிரித்தான்!

பஞ்சம் : அப்படியா? (அலறியடித்துக்கொண்டு ஓடுதல்) யோ, உபயோகம்! உபயோகம் தேன்கூடு என் நாக்குலே!

உப : எழுமிச்சம் பழம் வேணுமா சார்?

பஞ் : பேந்த என் பாக்கெட்டுக்குள்ளே! நுபா நோட்லே நோட்டீஸ் அடிப்பேன்! லட்ச நுபர்யிலே நாடகம் மஞ்சுளாவுக்கு அதிர்ஷ்டம் வந்திருச்சு! நான் அலாவுதீன்! மஞ்சுளா அற்புதத் தீவு! மஞ்சுளா நினைச்சா மழையா கோட்டி ஆற ஓடும் பணம்! எங்க்ய்யா மஞ்சுளாவை?

உபயோகம் : எலுமிச்சம்பழம் வேணுமா சார்!

உபயோகம் : நீங்க திட்னீங்கன்னு கோபிச்சுக்கிட்டு இப்பத் தான் கம்பெனியை விட்டு வெளியே போரு!

பஞ்சம் : எங்கய்யா போரு?

உபயோகம் : அவள் வீட்டுக்கு போயிருப்பா!

பஞ்சம் : அது தெரியுது! போயி கூட்டிவாய்யா!

உபயோகம் : வீடு தெரியாதுங்களே!

பஞ்சம் : எப்படியாவது கூட்டிட்டு வாய்யா?

உபயோகம் : சரி! எதுக்குங்க?

பஞ்சம் : கேள்வி! எதற்கெடுத்தாலும் கேள்வி! பள்ளிக் கூடத்திலே... பத்திரிக்கையிலே... பிரசங்கத்திலே... பிஸ்னஸ்லே எங்கே பாத்தாலும் கேள்வி! அவள் அட்ரஸாவது தெரியுமாய்யா?

உபயோகம் : அவள் அட்ரஸை ஆபீசுலே குறிச்சுவைச்சேன்!

பஞ்சம்; போயி பாரய்யா!

(மஞ்சுளாவின் விலாசத்தைத் தேட இருவரும் போகின்றனர்)

* * *

## (கணபதி நாடகசபா)

பஞ்சம் : அட்ரஸை பாத்தியாய்யா? (தேடுதல்)

உபயோகம் : இல்லீங்க!

(இச் சமயம் மஞ்சுளா வருதல்)

மஞ்சுளா : சார்!

பஞ்சம் : (கவனியாமல் எனக்குப் பேச நேரமில்லே! நான் மஞ்சுளாவின் அட்ரஸை தேடுகிறேன்!

மஞ்சுளா : சார்... நான்தான்...

பஞ்சம் : (மீண்டும் கவனிக்காமலே) இதுலே மஞ்சுளாவின் அட்ரஸ் இருக்கான்னு பாரு! (புத்தகத்தை கொடுத்தல்)

மஞ்சுளா : சார்! நான்தான் சார் மஞ்சுளா!

பஞ்சம் : எனக்கு மஞ்சுளா தேவை இல்லே! மஞ்சுளாவின் அட்ரஸ்தான் தேவை!

(என்று சொல்லிக்கொண்டே திரும்பும்போது மஞ்சுளாவை பார்த்துவிட்டு) யோ... உபயோகம்! மஞ்சுளா வந்தாச்சு! எல்லாத்தையும் நானே தேடணும்! நானே பாக்கணும்! நானே செய்யணும்! வாமா! இப்படி உட்காரு! சும்மா வா! பயப்படாதே! இதுலே உட்காரு! அது அசிங்கமா இருக்கு! டேய்! அஞ்சுவளசல்! போயி காபி, கூல் டிரிங் கொண்டுவா! அப்படியே வரும்போது விசிறியையும் எடுத்துட்டு வா! (அஞ்சுவளசல் போதல்)

மஞ்சுளா : (நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு) சார்! நான் ஒங்ககிட்டே மன்னிப்பு கேட்கலாம்னு வந்தேன்!

பஞ்சம் : மன்னிப்பு கேட்கத் தயார்!

மஞ்சுளா : நீங்களா......

பஞ்சம் : நீ என்ன சொன்னாலும் நான் கேட்கத் தயாரா இருக்கேன்! உன்னை நான் ஆத்திரத்துலே பேசிட்டேன்! ஆர்வமுள்ள உனக்கு ஆதரவு காட்ட வேண்டியதுதான் என்னுடைய கடமை! அந்தக் கடமையை நான் மறந்து விட்டேன்! நாடக மேடை ஒரு அழகான நந்தவனம்! அந்த நந்தவனத்திலே நடிகை ஒரு மலர்! அந்த மலரை கசக்கவிட்டது மகா தவறு! மஞ்சுளா! ஒரு சந்தோஷச் செய்தி! இன்னையிலிருந்து நீ தான் எங்க கம்பெனிக்கு கதா நாயகி!

மஞ்சுளா : (ஆனந்தத்துடன்) ஆ! கதாநாயகி! நிஜமாகத் தானா சார்?

பஞ்சம் : நிஜமாகத்தான்! இந்தப் பஞ்சம் சொன்னால் பழைய பஞ்சாங்கம் சொன்னது மாதிரி! உபயோகம்! அக்ரிமெண்ட் பாரத்தை எடுத்துட்டு வாய்யா! போய்யா!

மஞ்சுளா : சார் ! நான் உண்மையாகவே கதாநாயகிதானு ?

பஞ்சம் : சத்தியமா... இவன் தலையிலே (உபயோகம்) அடிச்சு சொல்றேன் !

மஞ்சுளா : அப்படியா ?

பஞ்சம் : யோ... உபயோகம்! அக்ரிமெண்ட் பாரத்தை எடுத்தியாய்யா ?

உபயோகம் : மணியார்டர் பாரம், தந்தி பாரம், எல்லாம் இருக்கு ! ஆனுல் அக்ரிமெண்ட் பாரத்தை மட்டும் காணேும் சார் !

பஞ்சம் : யோ... உபயோகம்! உன்னுலே எனக்கு என்னய்யா உபயோகம் ? இது என்னய்யா ?

உபயோகம் : அக்ரிமெண்ட் பாரம் !

பஞ்சம் : எல்லாத்தையும் நானே தேடணும் ! நானே பாக்கணும் ! நானே செய்யணும் ! வாய்யா !

(மஞ்சுளா விழுந்து கிடப்பதைப் பார்த்துவிட்டு) என்னம்மா ?

மஞ்சுளா : ஒண்ணுமில்லே ! சந்தோஷத்திலே அப்படியே கிறுகிறுண்ணு சுத்துனேனு... கீழே விழுந்துட்டேன் !

பஞ்சம் : காலிலே அடி ஒண்ணுமில்லையே ! இதுலே ஒரு கையெழுத்துப் போடு ! எப்படியாவது போடு ! மெல்ல ! என்ன கை டான்சு ஆடுது ?

மஞ்சுளா : எல்லாம் சந்தோஷம் தான் !

(மஞ்சுளா அக்ரிமெண்ட் பாரத்தில் கையெழுத்துப் போடுகிருள் )

(மஞ்சுளா மகிழ்ச்சியுடன் பாடுகிருள்)

* * *

## (கணபதி நாடக சபா)

(பஞ்சம் படுத்துக்கொண்டே எமன் தனது உயிரைக் கேட்பதுபோல் கனவு காணுதல்)

பஞ்சம் : என்னையை விட்டுடுங்க ! பயமா இருக்கு ! நீங்க யாரு ?

எமன் : நான் தெரியவில்லையா உனக்கு ? நான் தான் உன் உயிருக்கு உரிமையானவன் ! உன் உயிரை வாங்க வந்திருக்கேன் !

பஞ்சம்: அய்யா! என்னை விட்டுடுங்க! வெள்ளிக்கிழமை வெளியூர்லே ஒரு நாடகம் இருக்கு! அது வரைக்கும் விடுங்க — அப்புறம் ஒங்க பின்னாலே வந்துட்றேன்! வேணும்னா உங்களுக்கு... ஒரு காம்பிளிமெண்டரி பாஸ் எழுதித் தர்றேன். நான் நல்லா நடிப்பேன். எனக்கு நாடகத்திலே நல்ல பெயரு. வேணும்னா வந்து பாருங்க ஒங்க் பேமிலியோட. நாடகம் முடிஞ்சதும் எல்லாரும் ஒரே வண்டியிலே போயிடுவோம்.

எமன்: அங்கே கலவரம் கலாட்டா வராதே?

பஞ்சம்: கலகம் விளைவிப்பவர்களை போலீஸார் வசம் ஒப்படைக்கப்படும்னு நோட்டீஸ்லே பெரிய எழுத்துலே போட்டிருக்கோம்.

எமன்: சரி! வெள்ளிக்கிழமைக்கு மேல் கெடு எதுவும் சொல்லக்கூடாது.

* * *

பஞ்சம்: சாவித்திரி! இன்னிக்கு என்ன கிழமை?

சாவித்திரி: (இந்திராணி) ஏன்... வெள்ளிக்கிழமை?

பஞ்சம்: (சத்தியவான்) சாவித்திரி! அதோ எமன் உயிரை எடுக்க வர்றான்! அய்யய்யோ பயமா இருக்கே!

சாவித்திரி: யோ அஸிஸ்டெண்ட்! எமனை சீக்கிரம் அனுப்புய்யா, இங்கே எறும்பு கடிக்குது.

உப: எமன் வேஷம் போட்றவன் பணம் கொடுக்கலேன்னு பவுடர் போடமாட்டேன்னு சொல்லி கோபிச்சுக்கிட்டு போயிட்டான்.

சாவித்திரி: யாரையாவது அனுப்புய்யா!

(உபயோகம் நாடகம் பார்க்க வந்த ஒருவனை எமனாக அனுப்புகிறான்)

பஞ்ச: யோ! அவனை அனுப்பாதைய்யா! அவன் நிஜமாகவே என் உயிரை வாங்க வந்தவன்!

சாவித்: (எமனிடம்) அய்யா! என் கணவனின் உயிரைத் தவிற வேறு எதையாவது கேளுங்கள்!

எமன்: எனக்கு உன் கணவனின் உயிர்தான் வேண்டும்!

சாவி: நான் கேட்கும் வரத்தைத் தருவீர்களா?

எமன் : கேள் !

சாவி : நாடு நகரம்...... ?

எமன் : தந்தோம் !

சாவி : மாமன் மாமி... ?

எமன் : தந்தோம் !

சாவித்திரி : குழந்தை ?

எமன் : அதையும் தந்தோம்.

(சாவித்திரி புருஷன் இல்லாமல் குழந்தை எப்படிப் பிறக்குமென்று பாடி முடிக்கிறுள்)

எமன் : நீங்கள் நடிகர்கள் ! நான் நிஜ எமன்.

(பஞ்சநாதம் கனவிலிருந்து விலகி கத்துகிறுன்)

* * *

(சேட்—மஞ்சுளாவுக்கு கொடுத்த சேலைகளுக்கு—மஞ்சுளா வதனத்தில் காதலி என்று எண்ணி சேட் வதனம் அன் கம்பெனி யின் பெயருக்கு பில்லை அனுப்பவே வதனம் பில்லுடன் மஞ்சுளாவை சந்திக்க நினைக்கிறுன்)

## நமது பஞ்சநாதம்—தகிடுதத்தோடு

(மேனேஜர் பஞ்சம் வந்து தகிடுதத்தத்தின் முதுகில் அடித்து விட்டு)

பஞ்சம் : ஹல்லோ...மிஸ்டர் குரங்குராஜன் !

தகிடுதத்தம் : என்னய்யா......நீ பிடிச்சதுமாதிரி அடிச் சுட்டு நீ அணைக்கிறதை தள்ளப்பாத்தீங்களே......

பஞ்சம் : என் பள்ளித்தோழன் குரங்குராஜன்னு நினைச்சு தெரியாம அடிச்சுட்டேன். நான் தான் இந்தக் கம்பெனி மேனேஜர்......

தகிடுதத்தம் : ஹல்லோ மிஸ்டர் பஞ்சம் ! (கையில் சிகரெட் தீயுடன் கை கொடுத்தல்)

பஞ்சம் : ஆ ! கையிலே தீயை வைச்சுக்கிட்டே நெருப்பை அணைக்கணும்னு சொல்றீங்களே...ஆமா...நீங்க யாரு ?

தகிடுதத்தம் : நான் ததிகினதோம் பத்திரிக்கை ஆசிரியர் தகிடுதத்தம் !

பஞ்சம்: பக்க மேளத்தையே பேருலே வைச்கிட்டீங்க போலி ருக்கே! என்ன விஷயமா வந்தீங்க?

தகிடுதத்தம்: மஞ்சுளாவை பேட்டி கண்டு பேசலாம்னு வந்தேன்.

பஞ்சம்: ஆக்ட்ரெஸ்களை நேரில் பார்த்தா பாதிக்ளாமர் போயிடும்! நீங்க ஸ்பெஷலா என் அறைக்கு வாங்க! ஸ்பெஷலா ரெண்டு கலர் சாப்பிடுங்க! மஞ்சுளாவைப் பற்றி வெல்கம்லே இருந்து வணக்கம் வரை இன்டர்வெல் விடாம சொல்றேன்.

தகிடுதத்தம்: நீங்க அவரை முதன்முதல்லே எங்கே பாத் தீங்க? அது எந்த ஊரு? என்பதையெல்லாம் கொஞ்சம் டீஸண்டா சொன்னீங்கன்னு நல்லது!

பஞ்சம்: நாங்க மதனப்பள்ளிக்கு கேம்ப் போயிருந்தோம். அப்போ வதனம்தான் எங்க நாடகத்துக்கு தலைமை வைச்சிருந்தாரு. நாடகம் முடிஞ்சதும் வதனம் மஞ்சுளாவுக்கு மாலை போட்டாரு. வதனம் நிமிர்ந்து பாத்தார்! அவ்வளவுதான்! ரெண்டு பேருக்கும் காதல் உண்டாயிருச்சு.

## கணபதி நாடகசபா

பஞ்சம்: டேய் உபயோகம்! ஒத்திகைக்கெல்லாம் தயாரா?

உப: ஓ...எல்லாரும் தயாரா இருக்காங்க!

("கண்ணகி" நாடகத்தின் ஒத்திகை முடிந்ததும்)

பஞ்: ஒய்! உபயோகம்! இன்னிக்கு கண்ணகி நாடகத்தின் ஒத்திகை எப்படிய்யா?

உப: ரொம்ப பிரமாதங்க! நான்தான் அந்தப் பெண்ணைப் பற்றி முன்பே சொன்னேனுங்களே...

பஞ்ச: நீ சொன்னதை மனசுலே வைச்சுக்கோ! இப்ப நான் சொல்றதை எழுதிக்கோ! பணம் இருந்தாலும் இல்லாவிட் டாலும்—வசூல் ஆனாலும் ஆகாவிட்டாலும்—மற்ற பெண்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும்— நீ இருந்தாலும் இல்லாவிட்டா லும்-நான் இருந்தாலும் இல்லா விட்டாலும் நாடகத்தை நடத்தியே தீருவேன்...ஹ......ஹ......ஹ......

(இச்சமயம் கடன் கொடுத்தவர்கள் வந்து விடுகின்றனர்)

செட்டி: கண்ணும் பூச்சி விளையாட்டா விளையாட்றே?

சேட்: உன் கூத்தாடித்தனத்தை எங்ககிட்டே காட்டாதே!

பஞ்சம்: அய்யா! கூத்தாடின்னு எல்லாத்தையும் திட்டாதீங்க! வேணும்னு என்னை மட்டும் திட்டுங்க! இன்னிக்கு நாடு முன்னேறுவதற்கு நடிகன் ஒரு படிக்கட்டு!

செட்டி: பணத்தை கொடுத்துட்டு பேசுய்யா!

பஞ்ச: அய்யா! கொஞ்சம் பொறுங்க! எனக்கு ஒரு பெரிய மனுஷனுடைய தயவு கிடைச்சிருக்கு! அது பூவாகி, காயாகி, பழமாகுற நேரம் கெடுத்துடாதீங்க! குழந்தை பெற்ற நேரம் தாயை கொன்னுடாதீங்க! யோ உபயோகம்! மஞ்சுளாவை அழைச்சுக்கிட்டு என் அறைக்கு வாய்யா! வாங்க!

(மஞ்சுளா வருகிறாள்)

பஞ்சம்: (கடன்காரர்களிடம் மஞ்சுளாவைப்பற்றி புகழ்ந்து பேசுதல்) இதுதாங்க என் கனவு! நான் சொன்ன நடிகை இதுதானுங்க! எங்க கம்பெனிக்கே மெயின் சுவிச்! நாடக ரயிலுக்கு இஞ்சின்! இவுங்க பெரிய கோடீஸ்வரர் பி. எஸ். வதனத்தின் காதலி! இவுங்களுக்கு தினசரி வர்ற காரை வித்தாலே யாரும் வாங்க மாட்டாங்க! இவுங்க ஒரு நாள் செலவழிக்கிற பணத்தை உங்களில் யாராலும் சம்பாதிக்க முடியாது! பன்னீரிலே குளிக்கவேண்டியவுங்க—பச்சைத் தண்ணியிலே குளிக்குறாங்க—காஷ்மீர் பீதாம்பரத்திலே நடக்க வேண்டியவுங்க—கட்டாந்தரையிலே நடக்குறாங்க! சலவைக்கல் வீட்டிலே குடி இருக்கிறவுங்க—சாதாரண வீட்டிலே குடி இருக்காங்க! இதெல்லாம் யாருக்காக? எனக்காக! இந்த கலைக்காக! கல்யாணமே வேண்டாம்னு சொல்லிக்கிட்டு இருக்காங்க!

சேட்: இதை நாங்க நம்புறதுக்கு அத்தாச்சி?

பஞ்சம்: அத்தாச்சி! நாளைக்கு மஞ்சுளா அவருக்கு ஒரு பார்ட்டி வைக்கப் போறாங்க! அப்போ நீங்க வாங்க! உங்களை அவருக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன்! இப்ப நீங்க போயிட்டு வாங்க! (கடன்காரர்கள் போனபிறகு) குமுதா! கடன் கொடுத்தவுங்க பணத்தை எப்பம் போடணும்னு நான் நினைக்கலே! கலையும் முன்னேறணும்! கம்பெனியும் நல்லா இருக்கணும்! எப்படியாவது நீங்கதான் வதனத்தை அழைச்சுட்டு வரணும்! அவரு வரமாட்டாரு! என்ன—அவரு பெரிய மனுஷன்! நீங்க

அவரை கூட்டிட்டு வராட்டி எனக்கு கட்டாயம் ஆறுமாசம் தான்! நிச்சயமா சொல்றேன்! என் கடைசி கடுதாசியை கண்ணாடி போட்டு வைச்சுக்குங்க!

* * *

## (பார்ட்டியில்)

பஞ்சம்: யோ... உபயோகம்... என்னய்யா... இன்னும் அவுங்களைக் காணோம்.

உபயோகம்: வந்துக்கிட்டு இருப்பாங்க சார்.

(குமுதம், மஞ்சுளா, வதனம் ஆகியோர் வருகின்றனர்)

குமுதம்: பணக்காரர் மாதிரி நடிக்கணும்.

வதனம்: அதாவது காதலன் மாதிரி!

குமுதம்: பார்ட்டி முடியுறவரைக்கும்தான்!

பஞ்சம்: நீங்கதானே...

வதனம்: வதனம் நான்தான். சுந்தரவதனம் அண் கம்பெனி முதலாளி!

பஞ்சம்: தமிழ் நாட்டிலே உங்களைத் தெரியாதவுங்களே கிடையாது. தங்கமலைக்கு விளம்பரம் தேவை இல்லை. ஒங்க கம்பெனி இங்கே இருக்க வேண்டியதில்லை. மேல் நாட்டிலே இருக்க வேண்டியது.

வதனம்: ஏன் அங்கேகூட இருக்கே! அமெரிக்கா, ஜெர்மன், இங்கிலாண்ட்...

மஞ்சுளா: ஜப்பான்லேகூட ஒண்ணு இருக்குல்ல.

வதனம்: ஆமா... அது இப்பத்தான் ரீஸெண்டா ஆரம்பிச்சுது.

பஞ்சம்: ஒங்க அப்பாவைக்கூட எனக்குத் தெரியும்.

வதனம்: ஒங்க அப்பாவைக்கூட எனக்குத் தெரியும்.

பஞ்சம்: எப்படி?

வதனம்: எல்லாம் என் டார்லிங் சொல்லித்தான் தெரியும்.

மஞ்சுளா: (கரண்டியைக் கொண்டு வதனத்தின் கையில் அடித்தல்)

பஞ்சம்: சரி! சாப்பிடலாமா?

வதனம் : சார் ! நான் ஈவினிங் டைம்லே கோதுமைக்கஞ்சி தான் குடிக்கிறது வழக்கம்.

குமுதம் : அவரு எப்பவும் இப்படித்தான் ஹாஸ்யமா பேசுவாரு !

(இதைப் பார்த்துக்கொண்டிருந்த கடன்கார சேட்)

சேட் : அதோ உட்கார்ந்திருக்காரே... அவரு யாரு ?

பியூன் : அவருதான் கோடீஸ்வரர் வதனம் !

சேட் : அப்படியா ?

பஞ்சம் : (வதனத்திடம்) கூல்டிரிங் சாப்பிட்றீங்களா ? காபி சாப்பிட்றீங்களா ?

வதனம் : கூல்டிரிங் சாப்பிட்டா பல்லுக்குக் கெடுதி ! அஜீரணம் வேறே ! நீர் மோர் இருக்கா ?

மஞ்சு : (வதனத்தின் காலை மிதிக்கிறாள்)

பஞ்ச : கொஞ்சம் இருங்க ! இதோ வந்துட்றேன் !

(பஞ்சம் போன பிறகு)

குமுதம் : (வதனத்திடம்) என்ன தகிடுதத்தம்... சுயரூபத்தை காட்றீங்களே ! நீர் மோராம்ல நீர்மோரு ! இன்னும் கொஞ்சம்போனா பழைய சாதமே கேட்பீங்க போலிருக்கே ! அடிக்கடி காதலிங்குற வார்த்தை வருதே.

வதன : நீங்கதானே நடிக்கச் சொன்னீங்க.

மஞ்சு : அதுக்காக ரொம்பவும் ஓவராப் போறீங்களா......

வதன : ஓவரா நடிச்சாத்தானே பேரு வாங்க முடியும்.

குமு : மேனேஜர் வர்ராரு, நல்லா நிமிர்ந்து உட்காருங்க.

பஞ்ச : (கடன் கொடுத்தவர்களை அழைத்து வந்து வதனத்திடம் அறிமுகப்படுத்துதல்) இவுங்கதான் என்தோழர்கள். விடிஞ்சதும் என் முகத்திலேதான் முழிப்பாங்க.

சேட் : (வதனத்தைப் பார்த்து) நீங்கதானே......

வதன : உதவி செய்யுறவன், கஷ்டப்படும் கலைபை காப்பாத்துறவன், மஞ்சுளாவுக்காக ஆயிரமென்ன—ஆயிரம் லட்சத்தைக்கூட அலட்சியமாக அள்ளிக் கொடுக்கத் தயாரா இருக்கேன் !

சேட் : அப்போ நாங்க வர்றோம்.

* * *

(கணபதி நாடக சபா)

வதனம்: குட்மானிங். குட்மானிங்.

பஞ்சம்: வாங்க. உட்காருங்க. நீங்களெல்லாம் என்னைத் தேடி வர்றதுண்ணு பெரிய காரியம். என்ன சாப்பிட்றீங்க? காபி, ஓவல் ஏதாவது...

வதனம்: ஒண்ணும் வேண்டாம்.

பஞ்சம்: நான் ஒங்க கிட்டே என்ன பேசுறதுன்னே எனக்குத் தெரியலே. நான் ஒங்ககிட்டே ஒண்ணு கேட்கலாம்னு நினைக்குறேன்.

வதனம்: என்ன கேட்கணும்? கேளுங்களேன்.

பஞ்சம்: ஒரு 5000 ரூபா வேணும். 4000மாவது...

வதனம்: போர் தவுசன். இம்பாசிபில்! இம்பாசிபில்!

பஞ்சம்: மூவாயிரமாவது...

வதனம்: முடியாது... நான் சொன்னு சொன்னதுதான்! நான் கொடுக்குறதை கெளரமா வாங்கிக்கங்க.

பஞ்சம்: பத்தாயிரம் கேட்கலாம்னு இருந்தேன். இந்தக் கர்மம் பிடிச்ச நாக்கு உள்ளே இழுத்துக்கிடுச்சு. 5000 கேட்டு நாலாயிரம் கேட்டேன். கடைசியிலே மூவாயிரம் கேட்டேன். இந்த 1000 ரூபா எதுக்கு காணும்?

வதனம்: இது ஆயிரம் ரூபாயா... நல்லா பாருங்க. 10000 ரூபாய்க்கு செக் கொடுத்திருக்கேன்.

பஞ்சம்: (பரவசத்துடன்) பத்தாயிரமா? டென் தவுசன்!

வதனம்: இதை மஞ்சுளாகிட்டே சொல்லாதீங்க.

பஞ்சம்: நானே மறந்துட்றேன்.

உபயோகம்: நீங்களும் மறந்துடுங்க.

(வதனம் வெளியேறிப் போகும்போது எதிரே மஞ்சுளாவை சந்தித்தல்)

மஞ்சுளா: இங்கே எங்கே வந்தீங்க?

வதனம்: வந்தேன். இங்கே மாநாடு நடக்குது!

மஞ்சுளா: என்ன ஒளர்றீங்க? பழைய வதனம்னு நினைச்சீங்களா?

வதனம் : எஸ்... இல்லே நாடகத்துக்கு டிக்கட் வாங்க வந்தேன்.

மஞ்சுளா : நான் தான் பாஸ் கொடுத்தேனே... எங்கே டிக்கட்டை பாக்கலாம்.

வதனம் : இல்லே... நாளைக்கு தர்றேன்னுங்க. நான் உங்களை நேத்திக்கு... இல்லே... நாளைக்கு சந்திக்கிறேன்.

(வதனம் போய்விடுதல்)

பஞ்சம் : (உபயோகத்திடம்) பேங்கிலே ஏஜெண்டு இருக்காரான்னு பாத்து — இந்த செக்கை கொடுத்து பணம் வாங்கிட்டு வாய்யா.

உபயோகம் : இப்பவே போறேன். (செக்குடன் போதல்)

பஞ்சம் : யோ... யோ... உன்னைத் தேடும்படி வைச்சுடுறாய்யா.

(இச்சமயம் மஞ்சுளா வந்துவிடுதல்)

மஞ்சுளா : இந்த செக்கை கிழிச்சுப் போடுங்க.

பஞ்சம் : உனக்கு இந்த பத்தாயிரம் பத்து சல்லியா தெரியும். எனக்கு ஒரு புதையலாச்சே.

மஞ்சுளா : கிழிக்குறீங்களா ? இல்லையா ?

உபயோகம் : எங்க வயித்தை வேணும்னாலும் கிழிப்போமே தவிர இதை கிழிக்கமாட்டோம்.

மஞ்சுளா : இந்த செக்கு செல்லாது.

பஞ்சம் : செல்லாதா ? மிஸ்டர் வதனம் கொடுத்த செக்கா செல்லாது ?

மஞ்சுளா : அவரு வதனம் இல்லே.

பஞ்சம் : வதனம் இல்லையா ? பின்னே யாரு ?

மஞ்சுளா : நான் சொன்னா கோபிச்சுக்கிடமாட்டீங்களே.

பஞ்சம் : சரி. சொல்லு.

மஞ்சுளா : அவரு கோடீஸ்வரர் வதனம் இல்லே. பத்திரிகை எடிட்டர். வதனத்துக்கும்—எனக்கும் காதல்னு கதை கட்டி விட்டுட்டாங்க. அதை நீங்களும் நம்பி என்னை கதாநாயகியாக்குனீங்க. நான் சொல்லப்போகும்போது நீங்க தடுத்தீங்க. கடைசியிலே டின்னருக்கு வதனத்தை கூட்டிட்டு வரச்சொன்னீங்க. நான் அந்த

பத்திரிக்கை எடிட்டரையே வதனம் மாதிரி நடிக்கச் சொன்னேன். கடைசியிலே அவரு உங்களுக்கே போலிச் செக்கைக் கொடுத்து ஏமாத்திட்டாரு. அது போர்ஜரி செக்கு சார். என்னை மண்ணிச்சுடுங்க !

பஞ்சம் : (உண்மைக் கதையை கேட்டுவிட்டு) சரி. நீ போம்மா. யோ. உபயோகம். உபயோகம். போயி போலீசுக்கு போன் பண்ணுய்யா. பெரிய மனுஷன் பெயருக்கு செக் கொடுத்தான்னு. போய்யா. எய்யா இன்னும் நிக்குற? அடே பாவி ! என் வயத்துலே நெருப்பை அள்ளி போட்டுட்டியேடா. இங்கே வாடா. உன்னை செய்யுற விதமா செய்யுறேன். போய்யா. எய்யா திரும்பி வந்தே? டேய் படுபாவி.

* * *

## (நாடக மேடை)

பஞ்சம் : நன்றி இல்லாத கூட்டம் நாடகக் கூட்டம்னு சும்மா வா சொன்னுன். டேய் பிச்சை ! பிச்சை !

பிச்சை : மஞ்சளா அம்மாளை வீட்டிலே பார்த்தேன். காணேம்.

பஞ்சம் : யோ ! உபயோகம் ! அவளும் போய்ட்டாள்னு ரெண்டு பேரும் சேர்ந்து என் தலையிலே நெருப்பை கொட்டுங்க.

அஞ்சுவளசல் : எவ்வளவோ பெரிய பாவத்தையெல்லாம் செய்துட்டுத்தான் இந்த நிலைமையிலே இருக்கோம். இன்னும் என்ன பாவத்தை செய்யச் சொல்றே ?

பஞ்சம் : இன்னுமா மஞ்சுளா வரலே. யோ கணக்குப் பிள்ளை, கூட்டம் எப்படிய்யா ?

கணக்கன் : இதே மாதிரி எந்த நாடகத்துக்கும் வசூல் ஆனதே கிடையாதுங்க.

பஞ்சம் : இதை மாதிரி ஹீரோயினிக்கு நான் கஷ்டப்பட்டதே கிடையாது.

தகிடுதத்தம் : மேனேஜர் சார் ! சார் ! கதாநாயகி வேஷம் போட்றதுக்கு இந்திராணி இருக்காளே !

பஞ்சம் : எனக்கு இந்திராணி வேண்டாம். தமிழ்ராணிதான் வேண்டும். இது ஸ்டேஜ்யா ? இந்தக்கர்மத்தை அணைச்சுத் தொலை.

(காட்சி மாறுதல்)

(ரோட்டில் — வழியில் கார் நின்று போகவே மஞ்சுளா, உபயோகம், குமுதம் ஆகியோர் மாட்டு வண்டியில் வருகின்றனர்)

(காட்சி மாறுகிறது) (நாடக மேடை)

அருணசலம் : என் பொண்ணை எங்கய்யா ?

பஞ்சம் : மஞ்சுளாவுக்கு அப்பாவா நீங்க ? அவள்தான் என் வயத்துலே நெருப்பை கொட்டிட்டுப் போயிட்டாளே !

அருணசலம் : என் மகள் இருக்கிற இடத்தை சொல்றியா ? இல்லையா ?

பஞ்சம் : சொல்ல முடியாதுய்யா. போயி போலீஸ்லே ரிப்போர்ட் பண்ணு.

ஒருவன் : அண்ணே...ஜனங்கள் விசில் அடிக்கிறுங்க.

அஞ்சுவளசல் : பெல்லு அடிக்கட்டுமா ?

பஞ்சம் : பல்லை உடைச்சுப்புடுவேன்.

(காட்சி மாறுகிறது)

(ரோட்டில்)

(வண்டியும் சக்கரமும் பழுதாகி விடவே மூவரும் சைக்கிளில் வருகின்றனர்)

(காட்சி மாறுகிறது)

## (நாடக மேடை)

பஞ்சம் : இன்னுமா வரலே ?

திகிடுதத்தம் : மேனேஜர் சார் ! என்னதான் புதுசா இருந்தாலும் பழைய செருப்பு மாதிரி இருக்குமா ? புதுசு காலை கடிக்குமே. இந்திராணி இருக்கவே இருக்காள் !

பஞ்சம் : ஆமா ! தேங்காய் இல்லேங்குறதுக்காக பூஜை நின்னு போகுமா ? போய் வேஷத்தைப் போடும்மா.

(இந்திராணி போதல்)

(உபயோகம் கத்திக்கொண்டே வருகிருன்)

உபயோகம் : மேனேஜர் சார்! மேனேஜர் சார்! மஞ்சுளாவும் குமுதாவும் வந்தாச்சு !

பஞ்சம் : வந்துட்டீங்களா ! போய் வேஷத்தைப் போடுங்க!

அருணாசலம் : மஞ்சுளா ! என் மகளே !

பஞ்சம் : டேய் ! இவரைக்கொண்டுபோயி பஸ்ட் கிளாஸ்லே உட்கார வைச்சு கலரை உடைச்சுக் கொடுடா !

* * *

(நவீன வள்ளி நாடகம் ஆரம்பமாகிறது).

உபயோகம்: (கையில் கேமிராவை வைத்துக்கொண்டு ஆஹா... என்ன அழகு ! இயற்கை காட்சி பிரமாதம் !

குமுதம் : யோ துரைவாள் ! அனுமதி இல்லாமல் எங்களைப் போட்டோ எடுக்கும் நீர் யாரைய்யா ?

உபயோகம் : யு டோன் ஒரி மேடம் ! நான் எடுத்தது லேம்ஸ் சேப் ! அதாவது இயற்கை காட்சியை எடுத்தேன் !

குமுதம் : அதுலே நாங்களும் விழுந்திருக்கோம்.

உபயோகம் : அதுக்கு நான் என்ன செய்வேன் ? இயற்கை காட்சியோடு நீங்களும் ஐக்கியமாகி விட்டீர்கள் !

குமுதம் : அனுமதி இல்லாமல் அழகிகளை போட்டோ எடுத்தால் என்ன நடக்கும் என்பதைக் காட்டுகிறோம் !

உபயோகம் : காட்டுங்கள் ! பார்க்கலாம் !

(பெண்கள் உபயோகத்தை அடித்தல்)

* * *

பஞ்சம் : டேய் ! ரோமியோ எதுக்குடா செத்தான் ?

உபயோகம் : காதலுக்காக !

பஞ்சம் : மஜ்னு ஏண்டா பைத்தியமானான் ?

உபயோகம் : காதலுக்காக !

பஞ்சம் : ஜாம்ஸன் ஏண்டா சேத்து இழுத்தான் ?

உபயோகம் : காதலுக்காக !

பஞ்சம் : சலீம் ஏண்டா மண்டையை உடைத்துக் கோண்டான் ?

உபயோகம் : காதலுக்காக !

பஞ்சம் : அது எனக்கு இப்பத்தான் புரியுது ! சுண்ணாம்புலே இருக்கிற வெள்ளை மாதிரி எனக்கு இப்பத்தான் விளங்குது !

உபயோகம் : எதுக்கு இந்த அட்வான்சு பேச்சு ?

பஞ்சம் : இவள் யாரு தெரியுமா ? (போட்டோவை வைத்துக்கொண்டு) இவளுக்காகத்தான் எங்க அப்பா என்னைபெத்தாரு !

(நாடகம் பார்த்துக்கொண்டிருந்த வதனம்)

வதனம் : வெரி குட் ! வெரி குட் !

பஞ்சம் : டேய் ! அவனை போலீஸ்லே பிடிச்சுக் கொடுடா ! போலிச்செக்கு கொடுத்தவன் பஸ்ட்கிளாஸ்லே உட்கார்ந்திருக்கிருன் ! நாடகம் முடிந்ததும் போலீசைக்கூப்பிட்டு அவனை அரஸ்ட் பண்ணுடா ! (போட்டோவை) இவர் யாருடா ?

உபயோகம் : இவள் பெயரு வள்ளி, அவள் பெயரு அல்லி.

மஞ்சுளா : (வதனத்திடம் தனிமையில்) நீங்க எங்கே வந்தீங்க ? போயிடுங்க ! போலீஸ் உங்களை அரஸ்ட் பண்ணப் போகுது !

வதனும் : எதுக்கு ?

மஞ்சுளா : போலி செக்கு கொடுத்ததுக்கு போலீஸ் உங்களுக்கு மதிப்பு கொடுத்தாச்ச !

வதனம் : நானு கொடுத்தேன் ? வேணும்னு டெஸ்ட் பண்ணிபாக்கட்டுமே ! நான் தான் வதனம் !

மஞ்சுளா : பத்து ரூபாய்க்கே தாளம் போடுறது ! உங்களுக்கு எப்படி பத்தாயிரம் வந்ததுன்னு மேனேஜர் கேட்கிருரு.

வதனம் : நான் தான் உண்மையான வதனம் !

மஞ்சுளா : நடிகைகிட்டேயே நடிக்குறீங்களே .......... போங்க !

(போலீஸ் வதனத்தை விரட்டுகின்றனர். வதனம் மறுபடியும் மஞ்சுளாவிடமே போதல்)

மஞ்சுளா : மறுபடியும் இங்கே எங்கே வந்தீங்க ?

வதனம் : நான் மட்டுமா வந்தேன் ? ஒரு பட்டாளமே வருது !

மஞ்சுளா : (விசில் ஊதுகிருள்)

பஞ்சம் : (போலீஸிடம்) தயவு செய்து இங்கே நில்லுங்க ! நான் கூப்பிடும் போது வாங்க !

* * *

பஞ்சம் : வள்ளி ! உன்னைப் பார்த்தேன் ! மதியை இழந்து விட்டேன் !

வள்ளி : (மஞ்சுளா) என் அப்பா பார்த்தால் தப்பாமல் உம்மை சும்மா விடமாட்டார் !

பஞ்சம் : உயிர் போனாலும் சரி ! உன்னை மணக்காமல் விட மாட்டேன். குறுக்கே யார் வந்தாலும்... சுடுவேன்... சுடு வேன்... துப்பாக்கியில் தோட்டா இருக்கும் வரை சுட்டுக் கொண்டே இருப்பேன். சுட்டுக் கொன்று விடுவேன்.

குமுதம் : (அல்லி) வள்ளி ! உங்க அப்பா வர்ருரு.

மஞ்சுளா : அய்யய்யோ ! அவரு உங்களை மூட்டைப் பூச்சி மாதிரி நசுக்கிடுவாரே. நீங்க இந்தப் பக்கமா போயிடுங்க.

(பஞ்சம் மறைதல்—அங்கே வதனத்தைப் பார்த்து திகைத்தல்)

வ. தந்தை : வள்ளி ! உன்னிடம் எவனோ பழைய பாடத் தைப் பேசி— பாடி— ஆடி... ஏதோ செய்தானுமே ... அவனை எங்கே ?

மஞ்சுளா : அவனுப்பா ! அவன் இப்பத்தான் இந்தப் பக்க மாக ஓட்ருன்.

அஞ்சுவளசல் : ஆஹா... பஜார்... பஜார்...

மஞ்சுளா : (பஞ்சத்திடம்) எங்க அப்பா இந்தப் பக்கமாப் போயிட்டாரு. நீங்களும் போயிடுங்க.

பஞ்சம் : வள்ளி ! உனக்காக நான் காசிவரையிலும் ஓடத் தயார் ! கங்கையிலும் குதிக்கத் தயார்.

குமுதம் : எங்கே... ஓடுங்க பார்க்கலாம் ! ஒன்...டு...த்ரீ...

பஞ்சம் : (ஓடும்போது எதிரே வில்லன் வருதல்)

வில்லன் : நான் யார் தெரியுமாடா ?

பஞ்சம் : நான் யார் தெரியுமாடா ?

வில்லன் : நீ யாருடா ?

பஞ்சம் : நான்தான் இந்தக் கதைக்கு கதாநாயகனடா இவள்தான் கதாநாயகியடா !

வில்லன் : வள்ளி யார் தெரியுமாட்டா ?

பஞ்சம் : யாருடா ?

வில்லன் : வள்ளி என் மாமா மகள். அவளை நான்தான் மணப்பேன்! (என்று பஞ்சத்தைச் சுடும்போது —குண்டு வள்ளியின் தந்தைமீது பாய்கிறது)

பஞ்சம் : அய்யோ மாமா! அய்யோ மாமா... நான் இனி மேல் மாமான்னு யாரைக் கூப்பிடுவேன் மாமா!

(பஞ்சம் கைது செய்யப்படுதல்)

*　　　*　　　*

(வதனம் நீதிபதி வேஷத்தில் உட்கார்ந்து தீர்ப்பை விசாரித்தல்)

நீதிபதி : ஜூரிகளின் வாதத்துப்படி எதிரிக்கு மரண தண்டனையும், அது முடிந்ததும் ஆயுள் தண்டனையும் விதிக்கிறேன். இல்லே, ஆயுள் தண்டனையும் அது முடிந்த பிறகு மரண தண்டனையும் விதிக்கிறேன்.

உபயோகம் : பெருமைக்குரிய கோர்ட்டார் அவர்களே! இதோ இருக்கிறான் உண்மைக் குற்றவாளி! (என்று வில்லனைக் கொண்டுவந்து நிறுத்துதல். பஞ்சம் கூண்டிலிருந்து வெளியேறி)

மஞ்சுளா : ஆ... என் காதலா!

பஞ்சம் : என் காதலீ!

(நாடகம் முடிகிறது)

பஞ்சம் : (வதனத்தை) அதோ ஓட்றன்! பிடிங்க! விடாதீங்க! அவனை அடிங்க! உதைங்க! கோல்லுங்க! ஜனங்கள் கை தட்டி சிரிக்கட்டும்!

(இச்சமயம் இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டு)

இன்ஸ் : ஹல்லோ மிஸ்டர் வதனம்! நீங்களா? நீங்க நாடகத்திலே நடிப்பீங்கன்னு இன்னிக்குத்தான் தெரிஞ்சுது.

• பஞ்சம் : நீங்களா வதனம்? கையிலே பணம் இருந்தா கடன் சொல்லி சாப்பிட்டது மாதிரி புத்தி இருந்தும் இல்லாதது மாதிரி நடந்துக்கிட்டேன்.

வதனம் : நான் சொன்னேன். நீதான் வெளியே போன்னு சொல்லிட்டே. நீங்க...

பஞ்சம் : நீங்கதான் நாங்க! நாங்கதான் நீங்க! அப்பா பெரியவரே! இவருதான் உங்கள் வருங்கால மருமகப்பிள்ளை!

குமுதம் : மஞ்சுளா! எதுக்காக வீட்டை விட்டு வெளியேறி னியோ — அது நிறைவேறுச்சு!

அருணாசலம் : நீங்க சுந்தரவதனம் தானே? அடியே, தெரி யலையா உனக்கு! நம்ம பஞ்சாட்சரம் மகன்டி!

சம்பூரணம் : ஆமாங்க!

குமுதம் : திராட்சை நழுவி தேன்ல விழுந்ததுமாதிரி சொர் தத்திலேயே மாப்பிள்ளை வந்துட்டாரு! செல்லக் கண்ணுக்குட்டி!

பஞ்சம் : மஞ்சுளா...உன் நாடக ஆசையும் நிறைவேறிடுச்சு! நீதான் ஒண்ணுங் கிளாஸ் புத்திசாலி!

வதனம் : நாடகத்திலே நடிக்கக்கூடாதுன்னு கட்டுப்படுத்து னீங்களா? தவறு! பெரிய தவறு! மனிதனுக்கு உழைப்பு எப்படி முக்கியமோ, அதுபோல பொழுதுபோக்கும் தேவை! நாடகக் கலையை வளர்க்கணும்!

மஞ்சுளா : அய்யோ... போதுமே... உஸ்.

பஞ்சம் : என்ன உஸ்ஸு? இனிமேல் எதுக்கு உஸ்ஸு? கதைக்கு கதாநாயகர் தேவை! கதாநாயகரே!! எங்கள் கதாநாய கியை ஏற்றுக்கொள்ளுங்கள்!!!

* * *

## ‘அன்பு’ படத்திலே

அமெரிக்கா ரிட்டர்ன் குமாராக வருகிறார் தங்கவேலு. இவரது ‘வெல்வெட்’ பேச்சைக் கேளுங்கள்.

[விஜயா ஒரு பணக்காரி. கணவனை இழந்த அவளுக்கு மாலதி ஒரே பெண். அவளுக்குக் கொஞ்சம் இளமையுடன் இருக்க வேண்டு மென்ற ஆசை. பணத்தைக் கொண்டு காலவேதனை ஏமாற்ற முயலும் அவளை பாஸ்கர், குமார் இருவரும் ஏமாற்றிக் காலங்கழிக்கின்றனர்]

விஜயா : குமார்!

குமார் : ஐ ஆம் ரெடி!

பாஸ்கர் : ஐ ஆம் ஆல்ஸோ ரெடி மேடம்!

விஜயா : எதுக்கு ரெடி?

பாஸ்: நீங்க சொல்றதைக் கேக்குறதுக்கு!

விஜயா: இன்னிக்கு ரேஸ் கிளப்ல ஒரு வாண்டுப்பயல் தொந்தரவுபண்ணிட்டான். என்னைப் பாட்டின்னுகூப்பிட்டுட்டான்.

பாஸ்: அடப்பாவி! குடியைக் கெடுத்தானே!

குமார்: அவன் என்ன பண்ணுவான்? இண்டியன் கல்ச்சர் அது! நான் லண்டனல இருந்தப்ப......

பாஸ்: நான் அமெரிக்காவுல இருந்தேன், நாங்க ரெண்டு பேரும் பாரிஸ்ல மீட் பண்றப்போ......

(கலா வருகிருள்.)

கலா: நமஸ்காரம்!

விஜ: என்ன கமலா! மாலதி இருக்காளான்னு பாக்கவந்தியா?

கலா: ஆமா!

விஜ: அவ இன்னும் காலேஜிலிருந்தே வரலியே! அப்படிக் கொஞ்சம் ஹால்ல இரு! வந்ததும் சொல்றேன். (கலா போகிருள்)

குமார்: ஆமா, ஆமா!

விஜ: இல்லே! நிஜமாகத்தான் கேட்குறேன். இப்ப எனக்கு என்ன வயசு இருக்கும்?

குமார்: என்ன இருக்கும்! அதிகமாப் போனு சுமார் முப்பத்தஞ்சு இருக்கும்!

விஜ: நீங்க ஒண்ணு மாலதியப் பெத்து எடுக்கறப்போ எனக்கு வயசு பதினறு. இப்ப அவளுக்கு பதினலு.

பாஸ்: அதுதானே பார்த்தேன். குமார் முப்பத்தஞ்சின்னு சொல்ருரே, முப்பதுக்கு மேல இருக்காதேன்னு பார்த்தேன்.

விஜ: தட்ஸ் கரெக்ட்!

பாஸ்: பாவாடை கட்டுங்க! அப்போ இன்னும் பத்து வயசு குறையாவே காட்டும். எந்தப் பயலும் பாட்டின்னு கூப்பிடவே மாட்டான்க!

விஜ: ரைட்—மிஸ்டர் பாஸ்கர்!

குமார்: அப்போ கலா வந்தது. இப்ப மாலதி வரது!

மாலதி: (வந்து கொண்டே) நமஸ்தே!

பாஸ்கர்: குட் ஈவினிங்!

விஜ: உனக்காக டான்ஸ் மிஸஸ் வந்து ரொம்ப நேரமாக்காத் துக்கிட்டிருக்காம்மா !

மாலதி: இதோ, நான் ரெடி ! (கலா நெருங்கி வருகிறுள்) அடடே, மறந்துபோயிட்டனே !

கலா: என்ன ?

மால: நான் பனாரஸ் மியூஸியம் வரை போயிட்டு வரணும்.

கலா: பரவாயில்லே ! அதுவரை நான் வெயிட் பண்றேன்.

மால: தேங்க்ஸ் ! (போகிறுள்.)

கலா: (விஜயாவுக்கருகில் போய் உட்கார்ந்து கொள்கிறுள்)

விஜ: என்ன மிஸ்டர் பாஸ்கர் ! இந்தப் பெண்களுக்கு இளமை மட்டும் மாருதிருந்தா......

பாஸ்: வீட்ட விட்டு வெளியே வந்திருக்க மாட்டேன்னு புத்தரே சொல்லியிருப்பாரு !

விஜ: புத்தருக்கு மட்டுமென்ன? புருஷர்களாய்ப் பிறந்த யாருக்குமே அப்பிடித்தான் தோணும். என்ன கலா ?

பாஸ்: ஆமா...ஆமா !

குமார்: ஆமா...ஆமா !

கலா: நானும் ஒரு காலத்துல உங்களைப்போலத்தான் சிரமப் பட்டுக்கிட்டிருந்தேன். கடைசியாக என் சிநேகிதி மிஸ்டர் லேன்னு ஒருத்தரை அறிமுகம் பண்ணிவச்சா.

விஜயா: மிஸ்டர் லேயா ? அப்படின்ன அவரை நான் பாக்கணுமே ?

கலா: நான் வேணுமின்ன அவரை அழைச்சிக்கிட்டு வர்ரேன் !

விஜயா: கட்டாயம் அழைச்சிட்டு வா கலா ! என்ன குமார் ? என்ன பாஸ்கர் ?

குமார்: எஸ்...எஸ் !

பாஸ்கர்: எஸ்...எஸ் !

* * *

(விஜயாவின் வீட்டில் குமார், பாஸ்கர், விஜயா மூவரும் சீட்டு விளையாடிக் கொண்டிருக்கின்றனர். திருமலையை அழைத்துக் கொண்டு கலா வருகிறுள்.)

கலா : இவர்தான் நான் சொன்ன மிஸ்டர் லை !

விஜ : மிஸ்டர் லையா ? குட் ஈவினிங் மிஸ்டர் லை ! கமான் டேக்யுவர் ஸீட் !

லை : குட். ஈவினிங் !

விஜ : உங்களுக்கு சொந்த ஊர் இதுஇல்ல போலிருக்கு.

லை : ஆமா. மெட்ராஸ்ல இருக்கேன் !

விஜ : மெட்ராஸ்ல நீங்க தனியாகத்தான் இருக்கிங்களா ?

லை : ஆமா !

விஜ ; ஐ ஆம் வெரி க்ளாட் டு மீட் யூ! இவங்க ரெண்டு பேரும் எனக்கு வேண்டியவங்க ! இவர் பெயர் மிஸ்டர் பாஸ்கர். லண்டன் ரிட்டர்ன் ! இவர் பெயர் மிஸ்டர் குமார். அமெரிக்கா ரிட்டர்ன் !

லை : குட் ஈவினிங் !

பாஸ் : (சல்யூட் அடிக்கிறன் எரிச்சலோடு)

குமா : குட் ஈவினிங் !

விஜ : என்னைப்பார்க்காம இவர்களாலே ஒரு நாழிகைகூட இருக்க முடியாது. இதுபோல இவர்களைப் பார்க்காம என்னாலே ஒரு நாழிகைகூட இருக்க முடியாது !

லை : நான்கூட அப்படித்தான் ! இந்த விஷயத்துல அட்டை கூட எங்கிட்ட பிச்சை வாங்க வேண்டியதுதான் !

விஜ : தட்டீஸ் வாட் ஐ வாண்ட் மிஸ்டர் லை ! வேறு என்ன இருக்கிறது உலகத்திலே ? அதிலும் இந்த வாலிபம் இருக்கே வாலிபம், அது வசந்த காலம் மாதிரி வருஷத்துக்கு ஒரு தடவையாவது வருதா ? நம்ம ஆயுசுல ஒரே ஒரு தடவைதான் வருது ? அப்புறம் போயிட்டா போனது போனது தானே !

லை : அந்தக் கவலை உங்களுக்கு வேண்டவே வேண்டாம். போன வாலிபத்தை சிண்டைப் பிடிச்சி இழுத்துக் கொண்டு வந்து உங்கள்கிட்டவிட இந்த லை இருக்கார் ! குடுங்க கையை !

விஜ : லை ! ஐ லைக் வெரி மச் யுவர் நேம். கூப்பிடுவதற்கும் சுருக்கமாக இருக்கிறது. கேட்பதற்கு ஸ்வீட்டாக இருக்கிறது.

கலா : அதுதானேம்மா. மாஸ்டர் எம். திருமலையாக இருந்தவர் மிஸ்டர் எம். டி. லையாக மாறியிருக்கிறார்.

ஊல : உங்களுக்கு வேறொண்ணுமில்லேம்மா! பித்த நாடி கொஞ்சம் சத்தம் போட்டு பேசுது! நான் போயிட்டு நாளைக்கு வர்றேன்! (மாலதி வருகிறாள்)

மால : இவ்வளவு பவ்யமாகக் கைகூப்பும் இந்த பக்தர் யாரம்மா?

விஜ : இவர் நம்ம நேடிவ் டாக்டர்!

மால : எமனுக்கு ஏஜண்டா?

விஜ : சும்மா இரு மாலதி! கோவிச்சுக்கிடப் போறார்.

மால : குட் ஈவினிங் டாக்டர்! (போகிறாள்)

ஊல : குட் ஈவினிங்!

* * *

(விஜயா வீட்டில் தனியாக உட்கார்ந்து ஆப்பிளை சீவிக் கொண்டிருக்கிறாள். மிஸ்டர் குமாரும் மிஸ்டர் பாஸ்கரும் வருகிறார்கள்)

பாஸ்கர் : நம்ம வந்த நேரம் பஸ்ட் கிளாஸ் நேரம்!

விஜயா : குட் மார்னிங்! வாங்க வாங்க!

பாஸ் : குமார்! இப்ப நீங்க என்ன சொல்றீங்க? லண்டன் லண்டன் தான்! இண்டியா இண்டியாதான்! லண்டன்ல எவனாவது இந்த ஆப்பிள் பழத்தை சீவ தன் அருமையான நேரத்தை வேஸ்ட் பண்ணிக்கிட்டிருப்பானா?

குமார் : அந்த நேரம்தானே அவனுக்கு பணம்!

பாஸ் : எக்ஸாட்லி!

விஜ : சீவாமே எப்படிச் சாப்பிடுவாங்க?

பாஸ் : இது தான் லண்டன் ஸ்டையில்! (சாப்பிடுகிறான்)

குமார் : இதுதான் அமெரிக்கன் ஸ்டைல்! (சாப்பிடுகிறான்)

விஜ : எங்கே உங்களை இந்த ரெண்டு நாளா ஆளையே காணோம்?

குமார் : நம்ம வீட்டு மாட்டுக்கு சீக்கு வந்திருச்சு! வைத்தியர் கிட்ட காட்டலாம்னு போயிருந்தோம். வைத்தியர் யாருடான்னு பாத்தா... நம்ம 'ஊல'.

பாஸ் : அப்படியே ஸ்டன்னாயிட்டோம்!

குமார் : நம்ம லே டாட்டர்!

பாஸ் : டாட்டர் நோ! டாக்டர்!

விஜ : மாட்டு வைத்தியரா ?

பா : ஆமா எங்களுக்கு ஒண்ணுமே புரியலே !

குமார் : அந்த மாட்டு வைத்தியர் கிட்ட நீங்க உடம்பக் காட்றது எங்களுக்கு பிடிக்கல்ல !

பா : அப்புறம் மாட்டுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம் ?

குமா : ஆமாம்! ஆமாம்! (மிஸ்டர் லே வருகிறான்)

விஜ : வா திருமலே !

திரு : (கைகுலுக்கியவாறு) ஹல்லோ மிஸ்டர் லண்டன்! ஹலோ மிஸ்டர் அமெரிக்கா! யாருடா மாட்டு வைத்தியன் ? யாருடா சொன்னது ?

குமார் : யாரு, என்ன, எங்கே, எப்போ ?

(அடி விழுகிறது இருவருக்கும்)

குமார் : கொஞ்சம் ரெஸ்பெக்ட் குடுங்க !

லே : என்னது ?

குமார் : லண்டனே அடிக்காதிங்க ! தாக்குப் பிடிக்காது !

(லே இருவரையும் மாறி மாறி அடிக்கிறான்)

குமார் : பேஸ்ல கோட்டுனு பேர்ஸ்னலிடி போயிடும் !

லே : பெர்ஸ்னலிட்டியா ? இன்னும் அது இருக்குன்னு நினைச்சுக்கிட்டிருக்கியா ? போ வெளியே !

குமார் : யாரு போகமாட்டேன்னு சொன்னு இவ்வளவு நாளா உங்க கிட்ட பிளய்னு பழகிட்டோம். அதுனலே அமெரிக்கா போறதுக்கு பிளேனுக்கு ஏற்பாடு பண்ணுங்க !

லே : பிளேனு அச்சாபீஸ்ல அடிக்கக்குடுத்திருக்கு !

பாஸ் : ப்யூக் காராவது.. ...?

லே : எழுதிருக்கு ! போங்கடா ஜோக்கர் பசங்களா !

பாஸ் : ஜோக்கர் பசங்களா ? டே மச் ! (போகிறார்கள்)

* * *

# சிங்காரியிலே...

சிங்காரிப்படம் என்ருலே உங்களுக்கு நட்டுவனுர் ஞாபகம் வரும் நட்டுவனுர்தான் நமது தங்க வேலு....இனி சந்தித்துக்கொள்ளுங்கள்......

(ஆனந்த நிலையத்தில் காகாவும் நட்டுவனுரும் பேசிக்கொண்டிருக்கிருர்கள்.)

நட் : வடக்கே போவணுமாம், எப்படி ?

காகா : எப்படியா ? ரயில்லே.

நட் : அது தெரியுது, ரயில்லேன்னு...

காகா : பின்னே ?

நட் : இல்லே, இப்ப நம்ம நாடகத்துக்கு வசூல் இல்லியா ? பேரு இல்லியா...உம் என்னமோ அந்தப் பொம்பளே வந்து சேரப் போவுதாம். அதுக்காக வடக்கே போக மொடக்கு பண்ணிக் கிட்டிருக்காரா, எதுக்குங்கறேன் ?

காகா : அதுவா...... ? வட நாட்டுலேதான் நாட்டியத்துக்கு நல்ல மதிப்பாம். வசூலும் அபாரமா ஆகுமாம்.

நட் : சரிதான்...அதுக்காக என் உயிரில்லே போவுது! நீங்க வடக்கே போகிறதுக்குள்ளே நான் தெற்கே போயிடுவேன் போலிருக்கே.

காகா : உம்...டோண்ட் கேர், என்ன செய்யறது ? எனக்குக் கூடத்தான் வருத்தமும் கோவமும் வருது.

நட் : எதுக்காக ?

காகா : நம்ம ஜிம்கி ஹீரோயின் ஆகற சமயத்திலே இப்படியெல்லாம் ஆகுதேன்னு......

(நித்யாவும் சாமிநாதனும் வருகிருர்கள்)

நித் : என்ன நட்டுவனுரே...எப்படி இருக்கு ?

நட் : அப்படியேதான் இருக்கு.

நித் : என் ?

நட் : என்னுங்க. ஒவ்வொருத்தரும் எங்கம்மா, பாட்டி மாதிரி இருக்காங்க. இவுங்களுக்கு டான்ஸ் வருமா? வந்தாலும் இவுங்க ஆடி, யார் பாக்றது ?

சாமி : ஐயா ! அதெல்லாம் உனக்கு வாணும். சொல்றபடி செய்தா போதும்...

நட் : அப்படிங்களா ? சரி......மிதிங்க ஒன், டு......

# திரும்பிப்பார் படத்திலே

# .....புண்யகோடி.

புண்யகோடியாக வரும் தங்கவேலுவின் சம்பா ஷணைகள் உங்கள் ஞாபகத்திற்கு வந்திருக்கும்... படியுங்கள்........

## புண்யகோடி வீடு...இரவு

(கதவு தட்டப்படுகிறது. பாண்டியன் திறக்க, புண்யகோடி உள்ளே வருகிறுன்.)

பாண்டியன் : அப்பா எங்கப்பா போயிருந்தீங்க.

புண்யகோடி : எல்லாம் நல்ல காரியமாகத்தான்.

பாண்டியன் : ஏப்பா நாடகத்துக்கு வரவில்லே. நாடகம் ரொம்ப ஜோர்.

புண்யகோடி : கேள்விப்பட்டேன்.

பாண்டியன் : யாருப்பா சொன்ஞ?

புண்யகோடி : நம்ம மில்லு தொழிலாளிங்க எல்லாம் வந்திருந்தாங்கள்ள. அவுங்க சொன்னுங்க !

பாண்டியன் : மில் தொழிலாளிகள் வர முடிந்தது. மேஸ்திரி வர முடியலே, இல்லேப்பா !

புண்யகோடி : கோபிக்காதே ! நானும் உன் விஷயமாகத்தான் டவுன் வரையிலும் போயிருந்தேன்...

பாண்டியன் : என்ன விஷயமப்பா !

புண்யகோடி : உனக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணி விட்டேன்.

பாண்டியன் : இப்ப என் எனக்குக் கல்யாணம் ஏதாவது நிலையா ஒரு வேலை கிடைச்சு......

புண்யகோடி : இருக்கிற வேலை போதும்! எழுத்தாளன் வேலை நிலையான வேலைதானே. இந்தா பாரு தம்பி ரொம்ப நல்ல இடம்... பெண்ணும் நல்ல அழகு! மறுக்காம கல்யாணம் பண்ணிக்க......

பாண்டியன் : பெண்ணை நான் பார்க்க வேண்டாமாப்பா?

புண்யகோடி : தெரியுமே உன் சேதி எனக்கு! அதுக்குத் தானே போட்டோவை வாங்கிட்டு வந்திருக்கேன். (கோட்டுப் பையைத் தேடி) என்னடாது ஒவ்வொரு சலவைக்கு ஒவ்வொரு பாக் கட்டா திங்கிறான்... (போட்டோவை எடுத்துக் கொடுத்தல்)

புண்யகோடி : என்னப்பா சொல்றே!

பாண்டியன் : உங்களிஷ்டம்.

புண்யகோடி : அப்படிச் சொல்லு ராஜா! நாளைக்கே மில் முதலாளிகிட்ட போயி கல்யாணத்துக்குக் கொஞ்சம் பணம் கேக்கிறேன்... (ஆத்திரமாக) அவன் எங்க தரப்போறான் கஞ்சன்.

பாண்டியன் : என்கிட்டேயே பணம் இருக்குப்பா.

புண்யகோடி : அப்போ சீக்கிரமே கல்யாணத்தை நடத்திடலாம்.

## பாண்டியன் அறை

(பாண்டியன் பாமாவை மணக்கப்போகிற மகிழ்ச்சியில் இருக்கிறான். வெளியிலே மாப்பிள்ளை ஊர்வலத்துக்கு ஏற்பாடு நடக்கிறது. உள்ளே)

புண்யகோடி : சீக்கிரம் புறப்படுடா தம்பி! எல்லாம் தயாரா இருக்கு.

பாண்டியன் : ஊர்வலம் வேணுமாப்பா? எனக்கென்னமோ பிடிக்கலே?

புண்யகோடி : அது கெட்டுது போ! ஊர்வலமே வேண்டாமா! நம்ப என்ன அவாளை இவாளை கூப்பிட்டு கச்சேரியா வைக்

கப் போறேம். கொஞ்சம் சிறப்பா வெறும் மாப்பிள்ளை ஊர்வலம் கூடவா கூடாது-பெண் உன் பக்கத்திலே இருக்கப்போறதில்லே நீ ஏன் வெட்கப்படுறே.

(பாண்டு வாத்யம் திடீரென நிற்கிறது. ஒருவன் புண்யகோடியின் காதில் பெண் ஓடிவிட்டாள் என்ற செய்தியைக் கூறுதல். பாண்டியன் திகைப்பு)

## புண்யகோடி வீடு

(புண்யகோடி ஸ்ட்ரைக் நோட்டீஸ்களை பையனிடம் கொடுத்து)

புண்யகோடி: ராத்ரியோட ராத்ரியா ஊர்முழுக்க ஒட்டணும்! ஒரு சுவரு பாக்கி இருக்கக்கூடாது! தெரியுமா!

பையன்: சரிங்க!...

புண்யகோடி: ஆமாம் போ!

(பையன் போகிறான்—பாண்டியன் உள்ளே நுழைகிறான்)

புண்யகோடி: ஏம்பா தம்பி ஏன் வருத்தமா யிருக்கே!

பாண்டியன்: ஒண்ணுமில்லப்பா!

புண்யகோடி: நேத்தியெல்லாம் சந்தோஷமாயிருந்தே மறுபடியும் என்ன?

பாண்டியன்: ஒரு கவலையுமில்லே.

புண்யகோடி: ம்...பாண்டியா; உன்கிட்டே ஒரு விஷயம் சொல்லணும்னு இருந்தேனே!...உம்...

பாண்டியன்: (சிறிது திகைத்து) என்னப்பா!

புண்யகோடி: அது...அது...

(ஒரு பெண்ணின் போட்டோவைக் காட்டி)

புண்யகோடி: இதப்பாரு!

பாண்டியன்: (படத்தைப் பார்த்து) அப்பா! எனக்கு கல்யாணமே வேண்டாமப்பா!

புண்யகோடி: உனக்கு வேண்டாம் சரி...இந்தப் பெண்ணு...

பாண்டியன்: யாராயிருந்தாலும் சரி தேவையில்லே!

புண்யகோடி: நீ என்னப்பா அவசரக்காரனாயிருக்கே! அந்தப் பெண்ணு துடியாய் துடிக்குது!

பாண்டியன் : துடிக்கட்டும் அதற்காக!

புண் : பெண்ணுக்கு இஷ்டம் இருக்குன்னு சொல்றேன்.

பாண் : ஐயோ இது என்ன வம்பு!

புண் : வம்பு ஒண்ணும் இல்லடா... வயசானவன் கல்யாணம் பண்ணிக்கக்கூடாதுன்னு... ஊர்ல கத்துவாங்களே அதுக்குத்தான் இவ்வளவு சொல்றேன்!

பாண் : எனக்கு இப்பவும் கல்யாணம் வேண்டாம்! வயசான பிறகும் கல்யாணம் வேண்டாம்!

புண் : அட உனக்கு இல்லடா உனக்கு இல்ல! அது கெட்டது போ! என்னைப்பத்தி சொல்றேன் நான்!

பாண் : அப்பா! திருமணம் உங்களுக்கா?

புண் : ஏன் ஆச்சரியப்படுறே! இது என்ன உலகத்திலே எட்டாவது அதிசயமா?

பாண் : எப்போதப்பா உங்களுக்கு இந்த ஆசை வந்தது!

புண் : ஆமாண்டா! நல்ல கேள்விடா! எப்ப ஆசை வந்ததாம்? நான் வருஷம், மாதம் தேதி குறிச்சா வைத்திருக்கேன். ஆசைக்கு ஜாதகம் கேக்கிறான்.

பாண் : ஆசைக்கு ஜாதகம் இல்லாவிட்டாலும், அறுபது வயதை நீங்கள் கடந்துவிட்டீர்கள் என்பதற்கு ஜாதகம் இருக்கிறதப்பா!

புண் : அதிகப்பிரசங்கி!

பாண் : அப்பா! ஒரு இளம் பெண்ணின் வாழ்வைக் கெடுக்காதீர்கள்:

புண் : முட்டாள்! இளம்பெண்ணுக்கு வாழ்வைக் கொடுக்கப் போகிறேன்! விஷயம் புரியாமல் உளறுதே! இந்தப் பெண்ணை யாரும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேங்கிறான். இது ஒரு ஊமை!

பாண் : பேசத் தெரிந்த பெண்களேயே பேசமடந்தையாக்கிவிடும் பைத்தியக்கார சமூகம், ஊமைகளையா உயிரோடு விடப் போகிறது.

புண் : இப்ப என்னடா சொல்றே!

பாண் : உங்கள் முடிவை மாற்றிக்கொள்ள வேண்டுகிறேன்.

புண் : முடியாது! உன் முடிவைத்தான் மாற்றிக்கொள்ள வேண்டும். உனக்கு முன்னாடி பிறந்தவன் நான்!

பாண் : யார் மறுக்கிறார்கள்! பேரன் பேத்தியைக் கொஞ்ச வேண்டிய வயது!

புண் : உன்னைப் பெத்து வளர்த்து பாதுகாத்து மனுஷனாக்கி விட்டதுக்கு, இப்படி எதிர்த்துதாண்டா பேசணும்!

பாண் : அதற்காக ஆயிரம் வணக்கம் செலுத்துகிறேன். ஆனால் மகன் கல்யாணத்தில், மாலை எடுத்துத் தரவேண்டிய பருவத்தில் மாப்பிள்ளையாக மாறுகிறேன் என்கிறீர்களே; அதை என்னால் அனுமதிக்கவே முடியாது!

புண் : சீ! நீ என்னடா அனுமதிக்கிறது. என் இஷ்டம் நான் செய்கிறேன்.

பாண் : வேண்டாமப்பா இந்த விபரீத முடிவு!

புண் : சீ! என்கிட்டே பேசாதே!

பாண் : உங்கள் கல்யாணத்தை?

புண் : நடத்தத்தான் போகிறேன்.

பாண் : என்னை வெறுத்துவிட்டா?

புண் : உன்னை விரட்டிவிட்டு,

பாண் : நீங்கள் விரட்டவேண்டாம். நானே போகிறேன்.

புண்யகோடி : போடா! என் முகத்திலேயே முழிக்காதே! போடா போ!

பாண் : போகிறேன். உங்கள் போதை விரைவில் தெளியட்டும். (போகிறான்)

புண்ய : போடா போ! போதை தெளியட்டுமாமில்ல. இங்க என்ன குடிச்சிட்டா உட்கார்ந்திருக்காங்க.

* * *

## (4 மில் வாசல் : ரோடு)

ஒரு தொழிலாளி : (புண்யகோடியிடம் என்னங்க மேஸ்திரி குறைகளையெல்லாம் சீக்கிரம் கவனிக்கப்போறாரு முதலாளின்னீங்க ஒண்ணியும் காணோமே?

புண்யகோடி : அதெல்லாம் சீக்கிரம் நடக்கும் பாரு!...... நடக்கலேன்னு நம்ப தலைவர் இறுதிப் போராட்டம் ஆரம்பிச்சுடு வாரு !

தொழி : அது சரி... இப்ப ஆரம்பிச்ச ஜனவரிப் போராட்டமே பிசு பிசுண்ணு போய்ட்டுதுண்ணு சில பேர் பேசிக்கிருங்களே !

புண் : பேசுவாங்க, பேசுவாங்க! முட்டாள்கள். நம்முடைய தலைவர் பரந்தாமனை சாதாரணமா நினைச்சுக்கிட்டாங்க! புலி பதுங்குறது பாய்ச்சலுக்கு அடையாளம்ணு சொல்லு.

தொழி : பதுங்கிறது புலியா பூனையான்னுதானே சந்தேகப் படுருரு பாண்டியன் !

புண் : பாண்டியன்... அந்தப்பயல் பேச்சை என்கிட்டே பேசாதிங்க ... அயோக்கியப் பயல் ! அப்பன் கல்யாணம் பண்ணிக்கிறதைத் தடுக்கிற பயல் அகில உலகத்திலியும் நான் கண்டதில்லை.

தொழி : சரி மேஸ்திரி நாங்க வர்ரோம்.

(பரந்தாமன் காரிடம் நின்று கொண்டிருக்கிருன்)

புண் : நமஸ்காரம்...

பரந்தாமன் : என்ன ...ஆங்...

புண் : இப்பத்தான் மில் வேலை முடிஞ்சு...

பரந் : ம்... நான் சங்கத்துப் பக்கம் போயிட்டு வர்றேன்...

புண் : அப்படியா, வாங்களேன் வீட்டுக்குப் போகலாம்.

பரந் : எனக்கு அவசரமா வேலையிருக்கிறது......

புண் : சரிதான் வாங்க...... நம்ம கல்யாணத்துக்குக்கூட வரலே கல்யாண விருந்தாக ஒரு கப் காப்பி சாப்பிட்டு வரலாம்.

பரந் : ஓகோ... wife இங்கதானு!

புண் : ஆமாம்.

பரந் : சரி வாங்க காரில் போகலாம்.

* * *

## (5 புண்யகோடி வீடு)

புண்யகோடி : வாங்க! உள்ளே வாங்க...

பரந்தாமன் : கல்யாணத்தை ரொம்ப சிக்கனமாத்தான் செய்து விட்டீர்கள் இல்லையா......

புண் : ஆமாம்...... (உள்ளே திரும்பி) ராதா ராதா கொஞ்சம் வந்துட்டுப்போ. (ராதா வந்து நிற்கிருள்—அவளைக் காட்டி)

புண் : இதுதான்...

பரங் : ஓ... பாண்டியனுக்கு தங்கச்சி வேறே இருக்கா ?

புண் : தங்கச்சியா! இது அவனுக்கு சின்னம்மா! என் சம்சாரம்...

பரங் : ஓ... அப்படியா......

புண் : (அசட்டு சிரிப்பு) ராதா! டீ, காப்பி ஏதாச்சும் இருந்தா கொண்டா சீக்கிரம்...

புண் : ரொம்ப தங்கமான பொண்ணு! ஒரே ஒரு குறை! வாய்தான் ஊமை! ஆனு சுமாரா படிச்சிருக்கு......

பரங் : பாடுமா ?

புண் : எப்படித் தம்பி பாடும் ஊமைங்கிறேன்......

பரங் : ஓகோ... என் குயிலு வார்த்தையை சொல்லியா கூவுது என்னமோ கத்துது. அதையுர்தான் குயில் பாடுதுங்குருன்.

புண் : ஹி ஹி ஹி... ஆமா...ஆமாம், நல்லா சொன்னீங்க ஒரு வார்த்தை.

பரங் : வயதான காலத்தில் கல்யாணம் செய்து கொள்வதே ...சமையல் செய்யச் சொல்லி சாப்பிட, சங்கீதம் பாடச்சொல்லி ரசிக்கத்தானே.

புண் : உங்களுக்குத்தான் தெரியுமே. அந்தப் பாழாப்போன மில்லுக்கு உழைக்கவே சரியாயிருக்கும் நேரம்...

பரங் : பாவம்... அதுவும் வயதான காலத்திலே......

புண் : என்னு தம்பி சும்மா வயசாயிட்டு. வயசாயிட்டுங்கிறிங்க... (காபியை ராதையிடம் வாங்கியபடியே) தம்பி! தொழிலாளர் விஷயமெல்லாம் எப்படி யோசனை பண்ணியிருக்கீங்க...... அதை மறந்திடாதீங்க......

பரங் : மறப்பேனு மறக்கவே மாட்டேன். நினைத்ததை முடிக்காமல் விட்டதில்லே இந்த பரந்தாமன்...

புண் : எங்கே முடிக்காம விட்டுடுறீங்களோன்னு பார்த்தேன்!

பரங் : அப்ப வர்றேன்...

## (புண்யகோடி வீடு)

புண்யகோடி : ஆமா ஆமாம்! அது நானேதான் இது கூடவா சந்தேகம்...உம்...இருபது வருஷத்துக்கு முன்னே நான் எப்படியிருந்தேன்னு நீ நினேச்சுப் பாக்குறே! இருபது வருஷத்துக்கு அப்புறம் நீ எப்படியிருப்பேன்னு நான் நினேச்சுப் பாக்குறேன். உம் சராசரங்கள் வரும் சுழன்றே சரடு போல் அருகாடான்னு...உம் அதை விடு கழுதை... (அவளிடம் போய்) அப்போ நான் போய்ட்டு வரட்டுமா? போய்ட்டு வரட்டுமானேன் ... (போய் பிறகு திரும்பி) கேட்க மறந்தேனே. இன்னேக்கு என்ன சமையல்? இன்னேக்கு என்ன சமையல்னு கேக்கிறேன்...

புண் : ராதா! இனிமே இந்தத் தொந்தரவு வேண்டாம். ஆசைக்குக் கலியாணம் பண்ணி அவஸ்தைபட வேண்டியிருக்கும்... (பேப்பர் பென்சிலே எடுத்து) இந்தா இந்த பேப்பரை வச்சிக்க. இந்தப்பென்சில் குச்சியை வச்சிக்க. எல்லா விஷயத்துக்கும் எழுதியே காட்டிடு.

புண் : இனிமே எல்லா விஷயத்துக்கும் எழுதியே காட்டிடு!...போய்ட்டு வரட்டுமா ராதா நான் போய்ட்டு வரட்டுமா ... அது கெட்டுது போ!... (போகிறான்)

* * *

## மில் கேன்டின்.

புண்யகோடி : பரந்தாமனேப் போல ஒரு நாணயமான தலைவனேப் பார்க்க முடியாது. நல்ல ஒழுக்கம். நேர்மையான நடத்தை இவைகளுக்கெல்லாம் ஒரே ஒரு ஏக எடுத்துக்காட்டு நமது பரந்தாமனேதான்.

தொழிலாளி ஒருவன் : நீங்க புகழ்ந்து பேசுறீங்க. உங்க புள்ளேதான் எழுதியிருக்கு "போலித் தலைவன்" என்று!

புண்யகோடி : புள்ளே எழுதுவான் புத்தி கெட்டவன் அவன் எனக்குப் புள்ளையா, துரோகி.

தொழிலாளி : சும்மா இருங்க, பாண்டியன் பெரிய பகுத்தறிவு வாதி! இலட்சிய வீரன்! உண்மைத் தொண்டன்.

புண் : அவனு...துரோகி!

தொழி : போலித் தலைவன்னு சினிமா கூட எடுக்கப் போறாங்களாம்.

புண் : எடுப்பாங்க எடுப்பாங்க ! முதல்ல இந்த சினிமாவே ஒழியணும். சீர்திருத்தம் மண்ணாங்கட்டி, விதவைக்கு திருமணம் பால்ய விவாகம் கூடாது. வயசானவனுக்குக் கல்யாணமா. இதெல்லாம் சினிமா! எப்ப ஒழியுமோ இந்த சினிமா.

தொழி : ஏன் உங்களையே தாக்குதோ !

புண் : ஏய் பாட்டாளிக்கு ஏண்டா படக்காட்சி !

தொழி : நாள் முழுதும் கஷ்டப்பட்டு வேலை செய்றவனுக்கு கொஞ்சம் நிம்மதி தர்ரது சினிமா. அந்த அல்ப சந்தோஷங்கூட வேண்டாங்கிறீங்களா ?

புண் : அய்ய சந்தோஷம். உலகம் பூரா இந்த கரண்டு கட்டு வந்து சினிமாவே ஒழிஞ்சி போகணும்.

தொழி: நல்ல எண்ணத்தைப் பாருடா. சினிமா ஒழியறதுக்காக மழை பேஞ்சு ஊரு செழிப்பாகறதும் கூடாதுங்கிறாரு !

மற்றொரு தொழிலாளி : வயசானாலே இப்படித்தான் உளறுவாங்க.

புண்: யாருக்கடா வயசாச்சு...பல்லைத் தட்டிடுவேன். இந்தப் பசங்கள்ளாம் பாண்டியன் கோஷ்டி போல இருக்கு. அவனும் இப்படித்தான் சொன்னான். வயசாயிட்டுதாம்ல வயசு. இது பழனி பஞ்சாமிருதம் பட்ட தலை.

## மில் வாசற்புறம்

தொழி : என்ன இவ்வளவு நேரமா பேசுறாங்க முதலாளியும் பரந்தாமனும் ?

புண் : என்ன பேசுவாங்க ! நம்ப கோரிக்கையை முதலாளி கவனிக்கப் போறாரா இல்லையான்னு ஒரு முடிவு கட்டிட்டுத்தான் வருவாரு பரந்தாமன். அவர்என்ன சாமான்யமா ! சாக்ஷாத்புரட்சி அவதாரம்.

(பரந்தாமன் வேகமாக வருதல்)

புண் : தம்பி ! என்ன ஆச்சு......

பரந் : என்ன ஆச்சு. குறைகளை எடுத்துச் சொன்னேன். கோரிக்கையை கவனிக்கும்படியாக எப்படி எப்படியோ கேட்டுக் கொண்டேன். தொழிலாளர் புரட்சி மூளும் என்றுகூட எச்சரித்தேன். அசையவில்லை அந்த முதலாளி.

புண் : அப்புறம் ?

பரந் : அப்புறமென்ன ! திருமணம் செய்ய வேண்டியதுதான்!

புண் : என்ன ?

பரந் : இல்லை... தீர்மானம் செய்ய வேண்டியதுதான் ! திட்டம்தீட்ட வேண்டியதுதான்! கோரிக்கைகளை கவனிப்பதாக இத்தனை நாள் அமைதியாயிருந்தோம் அதை கோழைத்தனம் என்று கருதி விட்டார் குருட்டுமதி படைத்தவர் ! கொதித்துக் கிளம்புவோம் ! போர்க் கொடியை உயர்த்துவோம் ! புரச்சி நடத்துவோம் ! புரட்சி !

புண் : புரட்சி ! (எல்லோரும் புரட்சி கோஷம்)

## 9 சாப்பாட்டு அறை

புண்யகோடி : (சாப்பிட்டுக்கொண்டே) ராதா ! விடியக்காலம் நாலு மணிக்கு எனக்கு வேலையிருக்கு தலைவர் பரந்தாமன் கட்டளைப்படி பெரிய புரட்சி ஊர்வலம் நடத்த தொழிலாளர்களை ஒன்று சேர்க்கணும் ! மறந்துடாதே ! நாலு மணிக்கெல்லாம் எழுப்பி விட்டுடு ...

[மணி நான்கு அடிக்கிறது. ராதா எழுந்து விடுகிறாள்—புண்யகோடியை எழுப்புகிறாள்]

புண்யகோடி : (எழுந்து கடிகாரத்தைப் பார்த்து) சபாஷ் ! பின் தூங்கி முன் எழும் பத்தினி என்பார்கள் முன்னோர்கள். அந்தப் பத்தினி நீயேதான் !...ம் கோட்டை எடு !

[கோட்டை மாட்டிவிட போய்விடுகிறான்—ராதா படுத்துக் கொள்கிறாள். பரந்தாமன் வந்து அவள் கண்களைப் பொத்த, திடுக்கிடுகிறாள்.]

பரந்தாமன் : எப்படி வந்தேன்னு ஆச்சரியமாயிருக்கா ! இது விஞ்ஞான காலம். கடிகாரம் தேவைப்படுகிறது !

[தெருவில் போய்க்கொண்டிருந்த புண்யகோடி மணிக்கூண்டைப் பார்க்க, $12\frac{1}{4}$ எனவே திரும்புகிறான்.]

புண் : அடேபாவி ! பாதகா !

புண் : அடே கலியுக இந்திரா ! பாட்டாளிகளின் தலைவன் நீ தானடா ! உன்னை பெரிய தலைவன்னு நம்பி நான் மோசம் போனேண்டா ! அயோக்கிய பயலே ! இந்திரனை கௌதமர் சபிச்சாரம், உடம்பெல்லாம் கண்களாப் போகச்சொல்லி! உன்னை அப்படி சபிக்கக்கூடாது ! ரெண்டு கண்ணை வச்சுக்கிட்டே நீ இப்படி ரெண்டகம் பண்றியே உடம்பெல்லாம் கண்ணாப்போனா நீ ஊர்ப் பெண்களை யெல்லாம் விடமாட்டே ! உன்னை உயிரோடவே விடக்கூடாது !

பரந் : ஏ கிழவா ! மரியாதையாகப் பேசு !

புண் : என்ன சொன்னே சண்டாளப் பயலே !

[உலக்கையைத் தூக்கிவர, பரந்தாமன் ஓட்டம்]

புண் : இந்தப் பகல் வேஷக்காரனை நம்பி பாட்டாளி மக்களை யெல்லாம் கெடுத்துட்டேன் பாவிப் பயல் !

[போலீஸ் வந்து அரஸ்ட் செய்கிறது]

சப்-இன்ஸ்பெக்டர் : புண்யகோடி நீர் கைது செய்யப்படுகிறீர் !

புண் : ஆ ! என் ?

சப்-இன்ஸ்பெக்டர் : ஸ்ட்ரைக் செய்து அராஜகம் நடத்தியதற்காக !

புண் : அது என் குற்றமில்லீங்க !

சப்-இன்ஸ்பெக்டர் : கோர்ட்டில் சொல்லும் !

# பொன்வயலிலே

........'எஸ் ராஜ்' ஆக(அசல் அயோக்கிய சிகாமணியாக நடிக்கும் தங்கவேலுவின் அடாபிடி வசனங்களைக் கேளுங்கள்........)

## கண்ணம்மா வருகை

எஸ் : நமஸ்காரம் ! யார் நீங்க ?

கண் : சப்-இன்ஸ்பெக்டர் லெட்டர் கொடுத்தனுப்பிச்சாரு !

எஸ் : இன்ஸ்பெக்டரா ? டேய்...டேய்...அதிகப்பிரசங்கி ! சேர் கொண்டு வந்து போடு !

கண் : பரவாயில்லையே! சோபா இருக்கே ! அதுவே போதும்!

எஸ் : போதுமா? உட்காருங்க! (லெட்டரை வாங்கிப் படித்து விட்டு)

அட! சவால் கண்ணம்மால்லே நீங்க? இதுக்கு எதுக்கு லெட்டர்? கர்நாடக கலாராணி! ஸ்பெஷல் நாடக சாம்பியன்!

கண்ண : எனக்கு சினிமாவுலே ஆக்ட் பண்ணனும்னு ஒரே ஏக்கம்!

எஸ் : எம்மா... பட்டிக்காட்டு ட்ராமாவுலே ஆடி பட்டப் பெயர் வாங்கிட்டா சினிமாவுலே சேர்ந்துடலாமா?

கண்ண : இப்போ சினிமாவுலே இருக்கிற சிலபேரைத் தவிர மற்ற கொழுத்த நட்சத்திரங்களெல்லாம் ட்ராமாவுலே அவஸ்தைப் பட்ட பழுத்த அனுபவசாலிகள்தான் சார்!

எஸ் : அப்படியா?

கண்ண : அவுங்க வாழ்க்கை வரலாறுகளை விடாது படிங்க தெரியும்!

எஸ் : இருந்தாலும் சினிமா வேற—நாடகம் வேற.

கண்ண : அது எனக்கும் தெரியும் சார்! நாடகம்—அம்மா! சினிமா—பொண்ணு! தமிழ் நாடகம்—தழைத்த மரம்! தமிழ் சினிமா—அதில் பழுத்த பழம்! நாடகம்—அழகிய உருவம்! சினிமா—நன்றாக அலங்கரிக்கப்பட்ட ஒரு உருவம்! நாடகம்—தொழிலாளி வீட்டுப் பிள்ளை! சினிமா முதலாளி வீட்டுக் குழந்தை!

எஸ் : பலே...! சவால் கண்ணம்மா! ரொம்ப நல்லாத்தான் பேசுறே! எது... ஆக்டிலே இருந்து கதை டைலாக்ஸ் வரைக்கும் போயிட்டியே!

கண்ண : இன்னும் கேளுங்கள் சார்!

எஸ் : என்ன?

கண்ண : நாங்கள் தீட்டி இருக்கும் நாடகத்திலே கொதித்து வரும் அடுக்குமொழிகளை அனல் வீசும்படி அள்ளி வீசுவோம்! மறுமலர்ச்சித் தமிழை மனம் போனபடி பேசுவோம்!

எஸ் : அப்படியா? கதைக்கும் அதுக்கும் சம்மந்தம் இல்லாமல்—கடிவாளம் இல்லாத குதிரை மாதிரி!

கண்ண : அதோடு மட்டுமில்லே சார்! புரட்சிப் போர்வையில் பொங்கி வரும் கருத்துக்களைக் கவர்ச்சி தரும்படி கதைக்குள் புகுத்தி மகிழ்ச்சியூட்டி மகிழ்ச்சியடையச் செய்வோம்!

எஸ்: காரணம்?

கண்ண: அதில் சிலருக்கு அலாதி ஆர்வம்! ஆரவாரம்!! அப்லாஸ் !!! பூமாலே! புகழ்மாலே! அளவுக்குமிஞ்சிய பணம்!

எஸ்: புகழ்மாலே சூடிய பெண்மணியே! படம் எடுக்க பல நாட்கள் ஆகும்! இருந்தாலும் பொங்கல் கழித்து இங்கு வா! பொருத்தமான வேஷம் யாம் பொறுக்கித் தருவோம்!!!

கண்: அது வரைக்கும் ஒங்க ஆபீஸிலே வேலே செய்யுறேன் சார்!

எஸ்: அய்யோ! ஆபீஸ் வேலேன்னு ஆக்ட் பண்றதுன்னு நினேச்சியா? அதுக்கு இங்கிலீஸ் தெரிஞ்சிருக்கணும்! இன்னும்... இங்கு...... என்னென்னமோ தெரிஞ்சிருக்கணும்!

கண்: ஒங்க ஆபீஸுக்கு வேண்டிய டைப்ரைட்டிங் தெரியும், சார்ட்கேண்டிங் தெரியும், சைக்ளிங் தெரியும்!

எஸ்: குக்கிங் தெரியுமா?

கண்: சமையலிங் தானே? சமைக்கத் தெரியாத பெண்கள் சண்டிமாட்டுக்கு சமானம் சார்?

எஸ்: அப்போ காலேயிலே அவுஸ்லே குக்கிங் க்ளார்க்... அதாவது சமையல் குமாஸ்தா! மாலேயிலே சினிமாக் கொட்டகையிலே புக்கிங் க்ளார்க்! அதாவது டிக்கட் குமாஸ்தா! சம்மதமா?

கண்: என் எண்ணம் ஈடேறணும்! ஆசை பாஸ் ஆகணும்! நினேச்சி வந்தது நிறைவேறணும்!

* * *

## சதித்திட்டம்

எஸ்ராஜ்: பச்சையைக் கொண்டு வைரம்! பெண்ணேக் கொண்டு ஆண்! அறிவாளியைக் கொண்டு முட்டாள்! தொழிலாளியைக் கொண்டு முதலாளி! கட்சியைக் கொண்டு தலேவன் பிரகாசிக்கிறது நேட்சுரல்! அதாவது இயற்கை! புல் புல் மைனு, புறப்படு! சென்று வா வீர முழக்கத்துடனே!

பங்காரு: பங்கஜா! விஷ் யூ குட்லக்!

எஸ்: பொய்மான் கரடுக்குப் பக்கத்திலே — அரசமரத்தடியிலே...

பங் : ஆளைப்பிடிச்சி......

எஸ் : ஆளைப்பிடிக்கிறதுக்கு பங்கஜா பேயா பிசாசா?

பங் : மிஸ்டர் எஸ்ராஜ்! ஒங்க பந்தயத்துக்கு நான் வரலே வாபஸ்!

எஸ் : வாட் வாட்...வாட்? ஓ...ஹோ...என்னம்மா! சம்மதம்னுசொல்லிஸ்டார்ட் ஆனப்பிறகு...ஓ...பங்காருபேய்பிசாசுன்னு சொன்னதுனுலே கோபமா? அம்மா! சாரி! வெரி சாரி! வெரி வெரி சாரி! புறப்படுங்க! ஹீம்...

பங் : அம்மாவைக் கொண்டு ஆழமா யோசிச்சதுலே நீங்க ரெண்டு பேரும் மோசக்கார பூசாரிங்கன்னு புரிஞ்சு போச்சு!

எஸ் : வாட்...வாட் போச்சி?

பங் : சார்! எஸ்ராஜ்! ஸ்கை போச்சி!

எஸ் : என்ன போச்சி?

பங் : ஸ்கை போச்சி! அதாவது மானம் போச்சி!

எஸ் : இருந்தால்லே போறதுக்கு? ஹீம்...பங்கஜா! உன் கூர்மையான அறிவை மறைச்சி உன் எதிர்கால வாழ்வைக் கெடுக்கப் பார்க்கிருள் உன் அம்மா! அதனுலே நான் ரொம்பவும் பீல் பண்றேன்! அதாவது வருத்தப்பட்டேன்.

பங் : செல்லாத நோட்டை செலவழிப்பது போல் உங்க ப்ளாக் மார்க்கெட் வியாபாரம் இந்த புல் புல் மைனு கிட்டே பலிக்காது! செங்கோடனே சினிமாவுக்கு வரவழைக்கிற காரணம்என்ன? அதன் பிஸ்னஸ் என்னுங்குறது எனக்கும் தெரியணும்!

பங்காரு : பூ! இவ்வளவுதானு? நாளைக்குத் தெரியவேண்டியது இன்னிக்கே தெரிஞ்சுட்டாத்தான் என்ன? செங்கோடனே சினிமாவுக்கு வரவழைப்பதினுல் அவனுடைய சினேகிதம் நமக்கு கிடைக்கும்! அவன்கூட நெருங்கிப் பழகி பண்ணைக்கு எகமாக போகலாம் வரலாம்! அப்படியே அவன் கிட்டே இருக்கிற கூளாங்காளான் புதையலேக்கண்டு பிடிச்சி நாமே எடுத்துக் கிடலாம்.

பங் : புதையலா? எவ்வளவு? லட்சம் இருக்குமா?

எஸ் : ஒரு லட்சமா? பாக்கி ஒன்பது லட்சம்? பட்டிணத்துக்கு போயிடலாம்!

பங்: கோடம்பாக்கத்திலே ஸ்டுடியோ ஒண்ணு கட்டிடலாம்!

எஸ்: படம் ஒண்ணு எடுத்துடலாம்!

பங்: நான் ஹீரோ...நீ ஹீரோயினி!

எஸ்: நான் வில்லன்! ஒங்க ரெண்டுபேருக்கும் எதிரி!

பங்: காரு ஒண்ணு வாங்கிடலாம்!

எஸ்: பங்களா வாசம் பண்ணலாம்!

பங்: கலைராணி பட்டம் எடுத்து விடலாம்!

* * *

## செங்கோடனின் குடிசையில்

பங்கஜா: ஆஹா! ஊட்டி கொடைக்கானல் மாதிரி ஜில்லுன்னு இருக்குதே!

பங்காரு: அதிலே வேறே சந்தேகமா?

பங்கஜா: ஓட்டு வீடு, மச்சு வீட்டிலேகூட இவ்வளவு சுகம் இருக்காது!

எஸ்: யாரு இல்லேன்னு!

பங்க: குடிசை வீட்டுக்குச் சமானம்—குடிசை வீடே தான்!

செங்: டேய் சின்னப்பையா! இவுங்களுக்கு சும்மா பல்லு கொட்டிப் போகணும்! அப்படிக் கொடு.

சின்: (பங்கஜாவை நோக்கி) இவுங்களுக்குமா?

செங்: அவுங்களுக்குத் தாண்டா முக்கியம்.

(சின்னப்பையன் வந்தவர்களை அடித்தல்)

டேய் டேய்! ஜில்லுன்னு தண்ணி கொடுக்கச் சொன்னு அடிக்க ஆரம்பிச்சுட்டியே......போயி தண்ணி கொண்டு வா.

(சின்னப் பையன் போதல்)

டேய், டேய் சின்னப்பையா! யார்ரா அவன் மடையன், தண்ணி இங்கே பானையிலே இருக்கு! அதை விட்டுட்டு கிணத்துக்கு ஓட்றான் இருங்க, நான் போயி தண்ணி கொண்டு வர்றேன்.

(எஸ்ராஜ் அடுப்பங்கரை அருகே போதல்)

இந்தாங்க! அங்கே யெல்லாம் போகக் கூடாது! அது அடுப் பங்கரை!

(எஸ்ராஜ் புண்ணுக்கை எடுத்து)

பங்காரு: இதுதான் கேக்!

பங்: வாட்?

எஸ்: ஜமீன் பிணுயில்! அதாவது பிண்ணுக்கு! மாட்டுக்கு ஆகாரம்! மண்ணுக்கு உரம்!

பங்: மனுஷனுக்கு?

எஸ்: இந்த பஞ்சகாலத்திலே இதை உப்புமா கிண்டி திண்ணுப்புட்டுதான் சிலர் உயிரை வைச்சிருக்காங்க! நீயும் சாப்பிடு! பாடிக்கு ஹெல்த்! ஐயாம் சாரி! அதாவது பலம்!

பங்: என்னப்பா என்னையவே கலாட்டா பண்றே?

எஸ்: கிஸ்மஸ் கேக்ஸ் இல்லே! அதுகூட இதுலேதான் தயாரிக்கிறது! ஒரு கட்டியை உள்ளே போட்டு வை! ஊறட்டும்!

பங்: நீயே சாப்பிடு. (சாப்பிடுதல்)

செங்கோடன்: எய்...அதுமாட்டுக்கு வைச்சிருக்கேன்! திண்ணுப்புடாதீங்க!

பங்கஜா: சொல்லிடுங்க, போகலாம்!

பங்: ஹீம்...மிஸ்டர்...

செங்: ஒங்ககிட்டே ஒண்ணு கேட்கணுமே...

எஸ்: ஒண்ணு என்னே? ஒன்பது கேளுங்க!

செங்: இந்த அம்மா உங்களுக்கு என்ன வேணும்?

எஸ்: அவருக்கு சிஸ்டர்!

செங்: என்னங்க முகஜாடையைப் பாத்தா அப்படித் தெரியலையே!

பங்: எங்க சித்தப்பா மகள்!

செங்: இவருக்கு?

பங்: அவருதான் இந்த அம்மாளைக் கல்யாணம் செய்துக் கிடப்போறாரு!

செங் : சீ......சீ......சீ...சீ... அந்த அம்மாவைப் பார்த்தா அதிரூப அமராவதி மாதிரி இருக்காங்க ! இவரு என்னடான்னு குரங்கு மாதிரி இருக்காரு !

பங் : அவுங்க சொல்றதை நம்பாதீங்க ! நான் கல்யாணமே செய்துக் கிடப்போறதில்லே ! அப்படி செய்தாலும் உங்களை மாதிரி ஒரு படிச்ச பண்ணைக்கார மாப்பிள்ளையைத்தான் கட்டிக்கிடப் போறேன்.

பங்காரு : மிஸ்டர் செங்கோடன் ! உங்களுக்கு ஒரு பார்ட்டிக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

செங் : பார்ட்டியா ?

எஸ் : அதாவது விருந்து ! டீபார்ட்டி......டீபார்ட்டி......

பங்க : டின்னர் ! அதுக்கு நீங்க கட்டாயம் வரணும் ! மறந்துடாதீங்க ! கட்டாயம் வரணும்.

செங் : வர்றேன்......வர்றேன்......

* * *

## [மேல் மாடியில்]

பங்கஜத்தின் தாய் : எங்கே போயி சுத்திட்டு வர்றே ?

பங்க : என்னம்மா...... எங்கே போனே...... எங்கே வந்தேன்னு போலீஸ் கேடியை விசாரிச்சாப்புலே......

தாய் : அம்மான்னு ஒருத்தி இருந்தா அதெல்லாம் கேட்கத் தான் செய்வாள் !

பங்க : அப்போ நான் கேடியா ?

தாய் : கேடி இல்லே ! கேடிகளோடச் சேர்ந்த லேடி !

பங்க : அப்படீன்னு யாரு சொன்னா ?

தாய் : சேலத்திலே போலீஸ்காரர் சொன்னாப்புலே......

பங்க : இவரு வந்து அலாரிப்பு ஆரம்பிச்சுட்டார் ? அதான் நீ அல்லி டான்ஸ் ஆட்றே !

(கீழே)

எஸ் : என்னடா மணியோசை ! பேச்கிலேயே வாக் பண்றே? ஏதாவது நியூஸ் உண்டா ?

ஜிண் : போலீஸ் சின்னமுத்து வந்தாரு !

எஸ் : அவரு யாரு?

ஜிண் : அவருதான் ஆக்ட்டிங் சப்இன்ஸ்பெக்டர்!

எஸ் : அவரு எண்டா இங்கே வந்தாரு?

ஜிண் : ஒங்களை எங்கேன்னு கேட்டாரு ! என்ன விஷயம். என்கிட்டே சொல்லிட்டுப் போங்கன்னேன்.

எஸ் : ஓஹோ......நீங்களே கேட்டுக்கிட்டிகளோ? அதுக்கு அவரு என்ன சொன்னரு ?

ஜிண் : அப்புறம் அந்த அம்மா வந்தாங்க.

எஸ் : அம்மாவா ?

ஜிண் : அதுதான் பங்கஜம் அவுங்க அம்மா! அவுங்ககூட பேசிக்கிட்டே மாடிக்குப் போனரு !

எஸ் : அய்யோ ! இப்ப உயரே இருக்காரா ?

ஜிண் : இல்லே......நீங்க இப்படி வர்றீங்க ! அவரு அப்படி போரூரு !

எஸ் : என்ன பேசிக்கிட்டு இருந்தாங்க ?

ஜிண் : அதுதானே தெரியாது ! நான் மேலேயும் கீழேயுமா இருந்தேன்.

எஸ் : என்னடா மேலேயும் கீழேயும் ! ஒண்ணு மேலே இருந் திருக்கணும்! அல்லது கீழே இருந்திருக்கணும்! அவுங்க என்ன பேசிக்கிடுருங்கன்னு கேட்டிருக்கணும். கண்ணம்மா எங்கேஇருந்தா?

ஜிண் : அவங்களும் அங்கேயும் இங்கேயுமாத்தான் இருந் தாங்க !

எஸ் : போடா நான்சென்ஸ் !

(கண்ணம்மா வருதல்)

கண்ணம்மா ! இன்னிக்கு நம்ப வீட்டுக்கு ஒரு பெரிய மனுஷர் வர்ரூரு !

கண் : அவரு யாரு பெரிய மனுஷர் !

எஸ் : அவருதான் பொன் வயல் பண்ணேக்கார செங்கோடக் கவுண்டர்.

கண் : அவரு எங்கேயும் வர மாட்டாரே !

எஸ் : எங்கேயும் வாரதவருதான் இங்கே வர்ருரு! அதனுலே டீ பார்ட்டி வைக்கணும்!

கண் : டீ பார்ட்டியா ?

எஸ் : டீ பார்ட்டி!

கண் : நாசமாப் போச்சி!

எஸ் : இலேயை எடுன்னு சொன்னேனு..... சாப்பிட்டவன் எத்தனே? எப்பம் விட்டவன் எத்தனை பேருன்னு கணக்குப் பார்க்க வா சொன்னேன் ?

கண் : (கோபத்துடன் இருத்தல்)

எஸ் : ஐயாம் சாரி! அவரை வரவேற்புப்பண்ணி—குஷியா பேசிக்கிட்டு இருக்கணும்! நீயும்—பங்கஜாவும்!

கண் : என்னங்க? நாங்க பொம்பளேங்க! எங்களாலே எப்படி வரவேற்பு பண்ணமுடியும் ?

எஸ் : நீங்க பேசிக்கிட்டு இருங்க! நாங்க அதுக்குள்ளே கிளம்பிடரேம்! அதாவது வந்துடுரேம்!

கண் : சரி......சரி......

*　　*　　*

## வரவேற்பு

கண் : வந்துட்டீங்களா?

செங் : வந்துட்டேன்....

கண் : கொஞ்சம் இருங்க.

(கண்ணம்மா போதல்)

கண் : பங்கஜா! அவரை மாடிக்கு அழைச்சிட்டு வந்துட்டேன். அப்புறம்?

பங்க : அப்புறமென்ன ?

கண் : அவரை வர்ணிச்சி வாழ்த்தி குஷிபண்ணி பேசு!

பங்க : நானு?

கண் : நீ தானே அவரை மாடிக்கு வரச் சொன்னே!

பங்க : என்னுலே முடியாது! நான் மாட்டேன்.

கண் : அப்போ நீ போயி அவுங்களை கூட்டிவா! நான் பேசிக்கிட்டு இருக்கேன்.

பங்க : ஊ......ஹீம்......

கண் : காகா கர்ருன்னுதாம்! கணவனை அப்பான்னு கட்டிக்கிட்டாளாம்!

[கண்ணம்மா பங்காருவையும், எஸ்ராஜுவையும் அழைத்து வரப்போகிருள். கூட சின்னப்பையனை அழைத்துக் கொண்டு போய் சினிமாக் கொட்டகையில் விட்டு விட்டு வந்து விடுகிருள்.]

(எஸ்ராஜும், பங்காருவும் வந்து......)

எஸ் : சார்! நீங்க இங்கே வந்ததுக்காக ஐயாம் சாரி! அதாவது ரொம்ப ரொம்ப வருத்தப்படுகிறேன்.

செங் : சரி!

எஸ் : உங்களை எப்படி வரவேற்புப் பண்றதுன்னு தெரியும் வெளியே போங்க!

செங் : ஆமா!

எஸ் : யு கெட் அவுட்! நிலக்குப் பின்னுலே போயி நில்லுங்க! கண்ணம்மா...கண்ணம்மா......பங்காரு! இந்த வீட்டிலே வர்றவுங்க பெரிய மனுஷாள் தன்மையை கடைப்பிடிக்கத் தெரியலே! ஒண்ணு இவரைத் தெரு வாசற்படியிலே நிறுத்தி வரவேற்பு பண்ணி இருக்கணும்! அல்லது நிலை வாசற்படியிலாவது நிறுத்தி இருக்கணும்! ரெண்டும் இல்லே! கண்ணம்மா நீ இங்கே நில்லு! பங்கஜா...பங்கஜா...நீ இங்கே! நான் இங்கே! பங்காரு! நீ அங்கே! இப்போ பாருங்க சார்! நாங்க எப்படி வரவேற்பு பண்றோம்னு?

[செங்கோடன் வருதல்]

எஸ் : பொன் வயல் பண்ணையின் பட்டயக்காரரே வருக!

பங் : பொய்மான் கரடுப் புலியாரே வருக!

கண் : அஞ்சா நெஞ்சம் படைத்த அண்ணலே வருக!

எஸ் : வெல்கம்!

கண் : அப்படி வாங்க !

பங் : தங்கள் வரவு நல்வரவாகுக !

எஸ் : அமருக ! அதாவது உட்காருங்கள் ! கண்ணம்மா ! மாலையை எங்கே ?

கண் : ஸ்டாண்டிலே !

எஸ் : சந்தனம் ?

கண் : பீரோவுலே.

எஸ் : பன்னீர் ?

கண் : புட்டியிலே.

எஸ் : அது அது அங்கே அங்கே இருந்தால் இது வரவேற்பா அல்லது தமாஷா ?

கண் : அவரு இவ்வளவு சுருக்கா வந்து உட்காருவார்னு யாருக்குத் தெரியும் ?

எஸ் : போயி எடுத்துக்கிட்டு வா !

கண் : சரி ! எடுத்துக்கிட்டு வர்றேன்.

எஸ் : பங்கஜா ! நீ பூமாலை ! பங்காரு ! நீ பன்னீர் ! நான் சந்தனம் ! கண்ணம்மா ! நீ பொக்கை ! அதாவது பூச்செண்டு. ஹீம்... மாலையை போடு ! கரகோஷம் ! கரகோஷம் ! என் சும்மா நிக்குறே ? செண்டை கையிலே கொடுத்துட்டு கையை தட்டு ! ஹீம்...... மை டியர் வீரரே ! மை டியர் தீரர்களே ! ராஜா செங்கோடக் கவுண்டர் அவர்களுக்கு இந்த பாராட்டு விழா, எதற்காக... ?

செங் : தெரியாதுங்களே !

எஸ் : நமது அன்புக்குரிய புல் புல் மைனாவை ஆண்மையுடன் காப்பாற்றியதற்காக ! ஆங்காங்கு எப்படி நடைபெறுகிறதென்றால்...எப்படி ?

செங் : அதுவும் தெரியாதுங்களே !

எஸ் : பயனற்ற சொற்களை பள பளப்பான தாளில் அச்சிட்டு தலைவர் கையில் தருவதோடு சரி ! ஆனால்......நாம் நடத்துவது அப்படி அல்ல ! அது பாசம் பிடித்த பழைய வழக்கங்கள்! நாம் பழமையை நீக்கி புதுமையை புகுத்துகின்றோம் ! நமது புல் புல் மைனா பாடிய பரவசமிக்க பாடல்களை அவளே பாடி அபிநயித்து

ஆடி ஆனந்தமூட்டுவாள்! இதுதான் நாம் கண்டு பிடித்த நவீன நாகரீகம்! சினிமா மோஸ்தர்! எங்கே...புல்புல்மைனு! கொஞ்சம் ஜில் ஜில்னு பறந்து வா பார்க்கலாம்.

" அஞ்சாத வீரன் " (பாட்டு)

* * *

[அக்கப்போர்]

எஸ் : கண்ணம்மா! இந்த எஸ்ராஜை ஏமாத்திப்புடலாம்னு நினைக்கிறே! அதுதான் என்னைக்கும் நடக்காது!

கண்ண : இந்த கண்ணம்மா ஏமாந்துடுவான்னு நினைக்கிறீங்க! அதுதான் கனவிலும் நடக்காது!

எஸ் : நீ எதைப்பற்றி சொல்றே!

கண்ண : விளக்கம் வேறே வேணுமா? நம்ம திட்டம் நிறைவேற வரைக்கும்-கிட்ட நெருங்கினால் பல்லு கொட்டிப் போகும்.

எஸ் : நான் அதைச் சொல்லலே! நீ அன்னைக்கு சிவராமக் கவுண்டர் கிட்டே...நான் இன்னிக்கும் நாடகம் ஆடறேன்னு சொன்னியே...எந்த நாடகம்?

கண்ன : எல்லாம் எனக்குத் தெரியும்!

எஸ் : என்ன கண்ணம்மா?

கண்ண : ஏனய்யா...இப்படி சத்தம் போட்றே?

எஸ் : ஏய்யாவா?

கண்ண : எங்காணும் இப்படி சப்தம் போட்றே? இந்தக் கண்ணம்மா பனங்காட்டுப்புலி! சல சலப்புக்கு அஞ்சாது!

எஸ் : நான் கேட்குறதுக்கு பதில் சொல்லிவிட்டுப்போ!

கண் : ஏதாவது பேசுறதா இருந்தா...என் வீட்டிலே வந்து பேசிக்கோ! எப்ப சண்டை வந்ததோ...ஒரு நிமிஷம் கூட இருக்க மாட்டேன்.

எஸ் : கூட இருந்து துரோகம் பண்றதை விட தனியாப் போறது நல்லது.

கண் : சமாதானத்துக்கு வந்தால் சரி! இல்லே...இன்னியிலிருந்து எதிரி நம்பர் ஒண்ணு! நான் போகத்தான் போறேன்!

எஸ் : அப்படி உன்னையை போகவிட மாட்டேன் ! தடுத்து நிறுத்துவேன் !

கண் : தடுத்து நிறுத்துவிகளோ ? கொடுக்குற கும்காரம்...

(கையை ஓங்குகிருள் அடிக்க)

எஸ் : சரி சரி போ !

(கண்ணம்மா போன பிறகு)

அணுவளவு அசைந்திருந்தா அடிவிழுந்திருக்கும்போலிருக்கே!

ஹீம் ! எட்டின குடுமி ! எட்டாமப்போன காலு !

* * *

## அமரகவியில்

## N. S. கிருஷ்ணன் தம்பியாக 'வேலை கேட்க'ப்போன சம்பவத்தை படித்துப் பாருங்கள்!

### விநாயகர் கோவிலுக்கு முன்பு...

தம்பி : எய்! நில்லு! அப்படியே நில்லுங்க ! ஒங்க அப்பன் வீட்டு தேங்காயா ?

ஒருவன் : ஒங்க அப்பன் வீட்டு தேங்காயா ?

தம்பி : எதிர்த்தா பேசுறே ? அப்பா பிள்ளையாரப்பா ! ஏன் நிற்குறீங்க? போங்க போகமாட்டீர்களா ?

அண்ண : ஒருத்தரும் போக வேண்டாம். அப்படியே நில்லுங்க. தேங்காயை நான் வாங்கித் தர்றேன். (அடிக்கிருன்)

தம்பி : கொடுக்க மாட்டேன்.

அண்ண : கொடுக்காட்டி நானே கொடுப்பேன்.

தம்பி : கொடுப்பீங்க......

(இந்நேரம் அமரன் வருகிருன்)

அமரன் : அடிக்காதீங்க.

அண்ண : ஐயா ! நீங்களே சொல்லுங்க ! பசங்களுக்கு கொஞ்சங் கொஞ்சம் கிடைக்கிறதுக்குத்தான் சிதறுகாய் போட்டது —இவன் அதை மொத்தமா கொண்டு போருனே......

தம்பி : அப்பா ! நியாயாதிபதி ! எல்லாம் கொடுத்துட்டேன்.

அண்ணு : ஹீம்......உட்காரு. ஹீம்... நீங்க யாரு?

அமரன் : நானு? நான் ஒரு நாடோடி. வேலேதேடி இப்படியே வந்தேன். உங்கள் இருவரையும் பார்த்தேன்.

அண்ணு : எங்களைப் போலதானு? தம்பீ ! அவரைப் பார்த்தியா ! பெயரு நாடோடியாமல்ல......

அமரன் : என் பெயர் நாடோடி அல்ல—என் பெயர் அமரன்.

தம்பு : ஆஹா ! (என்று காலில் விழுகிருன்)

அண்ணு : டேய் ! என்னடா மனுஷனே கடவுளாக்குற......

தம்பி : கடவுளாக்கல. இவரு தான் அமரரு.

அண்ணு : ஆ ! ஐயா ! வணக்கம்......

தம்பி : அண்ணே ! என்ன மனுஷனே கடவுளாக்குறீங்க.

அண்ணு : கடவுளாக்கல்ல—மனுஷனுக்கு மதிப்பு கொடுக்கிறேன்.

(இந்நேரம் குடியானவர்கள் வருகிருர்கள்)

குடியான : அப்பா ! பிள்ளேயாரப்பா ! இரண்டு மூணுமாசமா மழையே இல்லே. இன்னிக்குத்தான் மானம் மப்பு மந்தாரமா இருக்கு. இன்னிக்கி மழையை பெய்யவைச்சா பத்து தேங்காய் விடலே போடுறேன்.

அண்ணு : தம்பீ ! பார்த்தியா ! மழையை பெய்யவைச்சா பத்து தேங்கா விடலே போட்ருணும்ல......

கூத்தாடி : அப்பனே ! சித்திவிநாயகப்பிரபு ! இன்னிக்குத்தான் இந்த ஊருக்கு புதுசா கூத்தாட வந்திருக்கிருேம். மானம் என்னமோ மப்பு மந்தாரமா இருக்கு. மழை பெய்து எங்கள் பிழைப்பை கெடுத்துடாதே—மழை பெய்யாமல் நிறுத்திஞல் இருபது தேங்காய் விடலே போட்றேன்.

அண்ணு : தம்பீ ! பாத்தியா ! மழை பெய்ய வைச்சா பத்து தேங்காய் விடலே. பெய்யாமல் நிறுத்திட்டா இருபது தேங்காய் விடலே. எதைத்தான் கேட்பாரு பிள்ளேயசர் ? இப்போ புரிஞ்சதா. பிள்ளேயாரு ஏன் தான் கல்லா இருக்காருன்னு ?

அமரன் : இந்தாப்பாரு! கடவுளை இப்படியெல்லாம் சொல்லக்கூடாது. ஹீம்......நீங்களெல்லாம் யாரு?

அண்ணு : எங்க ஊரிலே மழை பெய்து ஊரையே அழிச்சிடுச்சி, அதான் மழை இல்லாத இடமா பார்த்து வந்திருக்கோம்.

அமரன் : இப்பொழுது நாமெல்லாம் என்ன செய்வது ?

அண்ணு : யோசிக்க வேண்டியதுதான். மூணு பேரு ஆயிட்டோம் மூணு பேரும் தனித்தனியா வேலே தேடி அலேவோம். யாருக்கு கிடைக்குதோ—அதை வைச்சு மூணுபேரும் சாப்பிட்டுக்கிடுவோம்.

அமரன் : சரி ! அப்படியே செய்வோம். (கோவிலுக்குமுன்பு) ஆண்டவனே ! உன்னே அன்பின் அதிபதி என்பார்களே ! எங்கள் துன்பத்தை தீர்க்கக் கூடாதா ?

அண்ணு : டேய் ! யாருகிட்டடா பேசிட்டுப் போருரு.

தம்பி : போங்கண்ணே !

(அமரன் வேலே தேடிச் செல்கிருன்)

* * *

அண்ணு : எய் ! எய்...... என்னய்யா இது ?

வந்தவர் : 'வேலே கேட்டான்'.

அண்ணு : வேலே கேட்டதுக்கா குடலேப் பிடுங்கப் போறீங்க? என்னடா இது......

தம்பி : அண்ணே ! எல்லா இடத்திலேயும் வேலே கேட்டேன்—ஒரு இடத்திலும் கிடைக்கலே. இவர்ட்ட வந்து வேலே கொடுங்கோன்னு கேட்டேன்.

வந்தவர் : பார்த்தியா ! அவனே ஒத்துக்கிர்ருன்பாரு. நான் இல்லாமப்போனு 'சுப்பிரமணியர்' கையில் இருக்கிற வேலே திருடிக்கிட்டு வந்திருப்பான்.

அண்ணு : அவன் வேலே தேடிக்கிட்டுவர்ருன். நீ என்னமோ வித்தியாசமா நினேச்சிக்கிட்டியே.

வந்தவர் : நான் ஒன்ட்ட வந்து நியாயம் சொல்ல வந்தேன் பாரு—நான் தான் முட்டாள்—நீங்க அந்தப் பக்கம் வாங்க—பேசிக்கிறேன்.

அண்ணு : என்னடா தண்ணீர் கொண்டு வர்றே ?

தம்பி : வேறே கதி-இன்னிக்கி ஆகாரம் இதுதான்.

அண்ணு : நல்லவேளை.........இதையும் ஒருத்தன் சொந்தமாக்காமே இருக்கானே !

# 'நண்பனில்'

[உலகப் ப்ராடு பாலனின் நண்பன் தருமனுக தங்கவேலு]

(வீட்டின் மாடியில் ஒரு அறையில் பாலன் இருக்கிருன்)

பாலு : (தனியே) தோழர்களே! நாம் எல்லோரும் மறத் தமிழர்கள்! தோழர்களே ! நாம் எல்லோரும் சுத்த மறத்தமிழர்கள்! உச்சிமீது வான் இடிந்து வீழ்ந்தபோதிலும் அச்சப்படவே மாட்டோம் ! பிச்சைக்காரர்களாக இருந்தாலும் எச்சில்களையை......மன்னிக்கவும். வணக்கம். பிச்சைக்காரர்களாக இருந்தாலும் நமது லட்சியத்தைக் கைவிடமாட்டோம்! தோழர்களே! நமது கழகமானது நாள்தோறும் ஒற்றுமையாக இருந்து, அதாவது இந்தக் கழகம் இது செய்யவேண்டும்! தோழர்களே ! எது? தோழர்களே ! வெற்றிகரமாக நடத்தி வரவேண்டியது மறத்தமிழர்களாகிய நமது கடமையாகும். உங்கள் எல்லோரையும் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்!

(தருமன் ஒரு நாற்காலியின் பின்ஞல் ஒளிந்துகொண்டிருந்தபடி)

தரு : பேஷ்! பேஷ்! பேஷ்! வெகு பிரமாதம் !

பாலு : அட ! நீ இங்குதான் இருக்கியா? எப்படி... ?

தரு : என்ன இது? திடீர்னு மனுஷன் பிரச்சாரத்தில இறங்கிட்டிங்க ?

பாலு : பிரச்சாரமா இது ? பிஸினஸ்! பணம் இல்லாதவக பணத்தை சம்பாதிக்கிறதுக்கு ஒரு வழி லேட்டஸ்ட் வே !

தரு : இருந்தாலும்... கொஞ்சம் உத்தரவு தர்ரிங்களா ?

பாலு : எதுக்கு ?

தரு : உட்கார !

பாலு : என் உட்காரேன் ! நில்லேன் ! உட்காரு !

தரு : இந்தமாதிரி பிரச்சாரத்துக்கெல்லாம் கொள்கை வேணும்! கட்சி வேணும் !

பாலு : கட்சியாவது மண்ணுங்கட்டியாவது ! அதெல்லாம் சமயம்போல திருப்பிக்கிடலாம்பா !

தரு : இதென்ன டேபிள்வ்வேறு சுச்சியைப்போட்ட வுடனே திரும்பிக்கிடிறதுக்கு ! இந்தபாருங்க ஐம்பது ரூபா முதல்ல ஐம்பதாயிரம் ரூபா சம்பாதிக்க இப்ப ஒரு வழி கண்டுபிடிச்சிருக் கேன் !

பாலு : ஐம்பது ரூபா முதல்ல ஐம்பதாயிரம் ரூபாயா? அடேயப்பா ! அதென்னப்பா பிஸினஸ்?

தரு : அதான் வெத்திலைப்பாக்கு கடையெல்லாம் தொங்குது பாருங்க ! ஐம்பதாயிரம் அறுபதாயிரம்னு பிரைஸ் ! இப்படி ஒரு கம் பெனியை ஸ்டார்ட்டு பண்ணிட்டு உட்கார்ந்திட வேண்டியதுதான். எப்படியும் தினசரி நூறு ரூபாய் வருமானம் வரும் ! என்ன சொல் றிங்க ?

பாலு : நீ சொல்றபடி வருமானம் வருதுன்னு வச்சுக்கிடு வோம் ! கம்பெனிக்கு பேர் என்ன வைக்கலாம்?

தரு : கம்பெனிக்கு பேர் வேணும்ல !... ம் ... பி. டி. ஓ. சி. யின்னு வச்சுக்கிடுவோம் !

பாலு : பி. டி. ஓ. சி. ! கௌரவமா இல்லையே பேரு ! யாருமே வரமாட்டாக ! ஏன் எ. சி. டி. சி. யின்னு வச்சிக் கிடுவமே !

தரு : ஆ! வச்சுக்கிடுவோம் ! ஆனா திடீர்னு பீஸ் போயிருச் சுன்னா ?

பாலு : அதற்கு இது வச்சுக்கிட்டா என்ன ?

தரு : வச்சிக்கிடலாம் ! எது ?

பாலு : ஓ ! நான் சொல்லணுமோ ? ...ம்... பி. சி. டி. சி.

தரு : வச்சுக்கிடலாம் ! இதுக்கு ஆவேசக் கட்டணம் ?

பாலு : ஆவேசக்கட்டணம் ! ஒரு துண்டு சுற்பூரம் ! யாருடா இவன் ? பிரசவகட்டணம் ! ஆ ! ரெண்டு பேரும் உளறிட்டோம் ! ஆவேசக்கட்டணம் இல்ல, பிரவேசக் கட்டணம் !

தரு : பிரவேசக்கட்டணம் ! எவ்வளவு வைக்கலாம் சொல் லுங்க ?

பாலு : எட்டணா வச்சுக்கிடுவோம் !

தரு : எட்டணுவா! அது நிறைஞ்சா போதும். ஆமா அதுக்கு ஐம்பது ரூபா வேணுமே!

பாலு : அதெல்லாம் ஒரு தினுசா ஒதுக்கி வைச்சிருக்கேன்!

(கணக்கப்பிள்ளை வருகிறுன்.)

கணக் : தம்பி, உங்களை ஐயா கூப்பிடுருரு!

பாலு : எதுக்கு?

கணக் : ஐயா கோட்டுப் பையிலேயிருந்த ஐம்பது ரூபாயைக் காணேமாம்!

பாலு : நானு எடுத்தேன்?

கணக் : அதை தெரிஞ்சுக்கிடுறதுக்குத்தான் கூப்பிடுருரு!

பாலு : நான் அவசரமாக வெளியே போகணும்! விசாரணையை ஒத்திவச்சுக்கிடச் சொல்லு போ!

கணக் : (தருமனைப் பார்த்து) ஏய், உன்னையுந்தான் கூப்பிட்டாரு!

தரு : என்னை எதுக்கு?

தரு : எந்த சண்டாளப்பய எடுத்தானே......

பாலு : அடடடா! நீ ஏம்பா வையிற? எவன் எடுத்தானே எடுத்துட்டுப் போருன்.

தரு : எடுத்துட்டுப் போருனு? இப்ப என் பேரும்தானே வந்துருச்சு! ... ம்... உங்க்கூட சேர்ந்தல்லவா எனக்கும் இந்த கெட்டபேரு!

பாலு : வருமா? வர விடுவனு? வா வெளியே போகலாம்.

* * *

(பாலன் உட்கார்ந்திருக்க தருமன் காப்பி கொண்டு வருகிறுன்)

தரு : ஐய்யய்யோ!

பாலு : ஏன்?

தரு : ஆறிப்போச்சுங்களே!

பாலு : நீ என்னைக்குத்தான் சூடா கொடுத்திருக்க? பரவாயில்லே! மனசுக்குள்ள சூடா இருக்குதுபாரு! ரெண்டும் மிக்ஸ் ஆகிக்கிடும்! (குடித்துப்பார்க்கிருன்) சே!

தரு : என்னங்க?

பாலு : என்னடா புளிக்குது?

தரு : புளிக்குதா? பல் விளக்கலே பாருங்க! அப்படித்தான் இருக்கும்!

பாலு : ஓஹோ! இதுல ஆறிப்போயிருச்சுனு வேற சலிச்சிக்கிடுறியே! என்னடா ஒரே சோம்பேறித்தனமா இருக்கு! (கண்ணாடிமுன் போய் தலே சீவிக்கொண்டே) நானும் எத்தனையோ தடவை ட்ரை பண்ணிப்பார்த்துட்டேன்! இந்தக் கஞ்சப்பயகிட்ட ஒரு தம்படி கூட பேரமாட்டேங்குதே!

தரு : யாரு? எசமானு?

பாலு : எசமானு? அவனேதான்!

தரு : கஞ்சன்லயும் கஞ்சன் கடஞ்செடுத்த கஞ்சன்னு சொல்லுங்க! என்னங்க மனுஷன் வர வர என் பேரைச் சொல்லிக்கூப்பிடவே பயப்படுறரு!

பாலு : என் அடிச்சியோ?

தரு : தருமன்னு சொல்லப்படாதாம்! தருமன்னு கூப்பிட்டா அந்த தருமம் என்ற வார்த்தை வாயில வருதாம்! என்ன ஐடியாப் பாருங்க!

(கருணாகரம் பிள்ளே ஊஞ்சலில் உட்கார்ந்தபடியே)

கரு : டேய்!

தருமன் : பார்த்திங்களா?

கரு : டேய் தீவட்டி!

தருமன் : தருமன்னு கூப்பிட பயந்துகிட்டு தீவட்டியின்னு கூப்பிடுறதை!

பாலு : டே, போடா!

தருமன் : போனு போச்சு!

பாலு : இனிமே கொளுத்துனலும் கொளுத்திடப் போருரு போ!

தருமன் : செய்தாலும் செய்வாரு! தருமலிங்க பிள்ளேயிடம் வந்து) ஐயா கூப்பிட்டிங்களோ?

கரு : என்னடா வர வர சோப்பேறித்தனம் ஆகிருப்போல இருக்கு!

தருமன் : ஆகுறது என்னங்க? சோம்பேறித்தனம் வந்து வெகு நாளாச்சு!

கரு : என்னடா எதுத்துப் பேசுறே?

தருமன் : பின்னே என்னங்க! இன்னும் பொழுது விடிஞ்சு இவ்வளவு நேரமாச்சு ! இன்னும் போர்வை களையாம தூங்கிறுங் களே அவரு !

கரு : அவரா ?

தருமன் : நீங்க பாலு ஐயாவைத்தானே கேட்டீங்க ?

தரு : போடா ! போயி ஜெபமாலைய கொண்டு வா !

தருமன் : ஜெபமாலையா ? கொண்டு வந்தா போச்சு ! (போய் எடுத்து வந்து) இந்தாங்க !

தருமன் : சரி போ !

* * *

(தருமன் வந்து பாலனைத் தேடுகிறுன். பாலன் பல் துலக்கிக் கொண்டிருக்கிறுன்)

தரு : சார் ! சாரு! சார் !

பாலு : டேய் ! ஏண்டா அங்கே போய் கத்துற? இங்கே வா! ஆள் இல்லாத இடத்துல போய் கத்துறுன் !

தரு : வங்......து......

பாலு : வெந்நீர் வச்சிருக்கியா ?

தரு : ஓ ! காலையில் அஞ்சுமணிக்கெல்லாம் எடுத்து ஊத்தி வச்சுட்டனே !

பாலு : அப்ப அது வெந்நீரா இராது ! தண்ணீராவுல்ல இருக்கும் ! அது சரி மாமா என்ன செய்கிறுரு ?

தரு : சோதனை போடுறுரு !

பாலு : சோதனையா ?

தரு : ஆமாங்கண்ணு ! நேத்துத்தான் மனுஷன் ஜெப மாலைய வாங்கி எண்ணி வச்சாரு! மறுபடியும் மனுஷன் இன்னைக்கு வாங்கி எண்ணிப் பார்க்கிறுரே !

பாலு : ஏய் ! நீ நல்லா யோசனை பண்ணிச் சொல்லு. பணத்தை எண்ணுனுரா ? உத்திராட்சத்தை எண்ணுனுரா ?

தரு : ஐயோ ! ஐயோ ! உத்திராச்சக் கொட்டையைத்தான் எண்ணுனுரு ! போயும் போயும் இந்த உத்திராட்சத்தையா திருடு வேன் ?

பாலு : அதான் ! பணத்தைத்தான் திருடுவே ! உத்திராட் சத்தையா திருடப்போறே ? அதைத் திருடுறதுக்கு பரதேசிப்பயலு கள்ல வாணும் !

தரு : .......ம்...... ?

பாலு : கவலேப்படாதே !

தரு : கவலேப்படலே !

பாலு : அதான் படுறியே ! இன்னெருக்கவா ?

தரு : அதுக்காகக் கவலேப்படலே ! உங்களோட சேர்ந் தல்லவா எனக்கும் இந்தக் கெட்ட பேரு !

பாலு : வருமா ? வரவிடுவனு ? வா போகலாம் !

## பாலனும் தருமனும் பேசிக்கொண்டிருக்கின்றனர்

பாலு : விளம்பரம் கொடுத்து இவ்வளவு நாளாச்சு...ஒரு ஆவேசக் கட்டணத்தையும் காணேம் ! ஒரு பிரசவ கட்டணத் தையும் காணேம் !

தருமன் : ஒரு பிரவேசக் கட்டணத்தையும் காணேம் ! பிஸின்ஸ்னு அப்படித்தாங்க...முன்னலேயும் போகும் பின்னலேயும் போகும் ! கொஞ்சம் வெயிட்டுப் பண்ணனும், எங்க......மார்க்கட் எப்படி இருக்கு ?

பாலு : எந்த மார்க்கெட்டைக் கேட்கிறே ? கவிச்சி மார்க் கட்டைக் கேட்கிறியா ? காய்கறி மார்க்கெட்டைக் கேட்கிறியா ?

தருமன் : மணி மார்க்கெட் !

பாலு : மணி மார்க்கெட்டா ? அது ரொம்ப ரொம்ப டைட் ! ரொம்ப ரொம்ப டைட் ! இன்னும் கொஞ்ச நாள் இப்படியே இருந்தா டிங்குன்னு அறுந்து போகும் !

தருமன் : அறுந்தும் போகாது, தெறிச்சும் போகாது ! எங்க இப்ப எனக்கு ஒரு யோசனே தோணுது ! புதுத்திட்டமா சின்னதா தீட்டுனு என்ன ?

பாலு : தீட்டவும் வேணும், ஒண்ணும் வேணும் ! இனிமே தீட்டுனு ஜனங்க நம்ம முதுக நம்மளே பார்க்கும்படி செய்துடுவாக.

தருமன் : என் ?

பாலு : ஜனங்க முந்தி மாதிரி இல்லப்பா இல்லே ! இப்ப எல்லாரும் முழிச்சுக்கிட்டாக ! இனிமே ஏமாத்துறதுன்னு முடியாத காரியம் !

தருமன் : ஆமா......ண்......ணு !

பாலு : என்ன சொன்னே ?

தருமன்: ஆமான்னு சொல்ல வாயெடுத்தேன்...அண்ணேன்னு வந்திருச்சு !

பாலு : வரப்படாது ! நான் சொல்றேன் ! என்டா நம்ம தான் பிராடுன்னு நினேச்சுக்கிட்டிருக்கியா ? நம்மை விட பெரிய

வங்கள்லாம் இருக்காங்கப்பா! அவர்களெல்லாம் இருந்துதான் நமக்கு பேர் இல்லாம செய்துட்டாக ! நமக்கெல்லாம் வேண்டாம்.

தருமன் : இந்தாங்க !

பாலு : நான் அதெல்லாம் விட்டு விலகிட்டேன் ! வேண்டாம் !

தருமன் : அப்படியா ? நான் சொல்றதைக்கேளுங்க. பணம் !

பாலு : பணம் பெரிய பிரச்சினை ! இல்லையின்னு டிங்கி அடிப்பனு ?

தருமன் : கேவலம்னு நினைச்சா நீங்க கூட திருடுவீங்களா ?

பாலு : ......ம்...... !

தருமன் : உங்களோட சோந்தல்லவா எனக்கும் ரெண்டணுவுக்கு டிங்கி அடிக்க வேண்டி வந்திருந்திருச்சு !

பாலு : டிங்கியா? வரவிடுவனு? இரு வாரேன் !

தருமன் : சரி !

* * *

(பாலு சேகரிடம் கையெழுத்து வாங்க்ப்போய், நன்றக் உதை பட்டு திரும்புகிறன்.)

[பாலு படுத்திருக்க லலிதா ஒத்தட்டம் கோடுத்துக் கோண்டிருக்கிருள்]

லலி : பேசாம நீங்க இங்கேயே இருந்திருந்தா ... ?

பாலு : சீ ! நீ ஒத்தடங்குடுடி! (தருமன் தவுட்டை வறுத்துக் கொண்டு வருகிருன்)

தரு : சீக்கிரம் பிடிங்க் ! சூடு ஆறப்பேர்குது !

(லலிதா வாங்கி ஒத்தடம் கோடுக்கிருள்)

பாலு : தருமா ! என்னடா சூடாவே காணும் !

தரு : இந்நேரம் வரைக்கும் வருத்துக்கொண்டு வந்து கொடுத்திருக்கேன் ! சூடு இல்லையா ? அப்ப இனிமே நெருப்பை அள்ளிக்கொண்டு வந்து ஒத்தடம் கொடுக்கவேண்டியதுதான் !

பாலு : எனக்கிருக்கிற வலிக்கு அதுவும் தாங்கும்டா !

காமா : (வந்துகொண்டே) ஒண்ணுந் தெரியாத என் பிள்ளை தன்னந்தனியே ஆம்பிட்டுக்கிட்டா அதுக்கு இப்படியா அடிக்கச் சொல்லியிருக்கு ? அவன் கையில கட்டை முளைக்க ! வரட்டும் சொல்றேன் !

தரு : அதல்லம்மா ! மனுஷன் யாரா இருந்தாலும் சரி இடம் தெரியாம, ஆள் தெரியாம பக்குவமா நடந்துக்கிட தெரியல்லேனு இப்படி ஒத்தடம் கொடுக்க வேண்டியதாத்தான் வரும் !

பாலு : எட்டே நாள்ல அவன் முட்டியை உடைக்கிறேன்.

காமா : ஆமா கண்ணு! அப்படி எதாவது செஞ்சாத்தான் என் ஆத்திரம் அடங்கும் ! இங்க கொண்டா நான் ஒத்தடம் கொடுக் கிறேன்.

தரு : அவருக்கு ஒத்தடம் கொடுக்க நான்தான் சரி ! நீங்க போங்க ! நீங்க போயி இதை அடுப்புல போடுங்க ! நீங்க முதுவைக் காட்டுங்க !

(லலிதாவும் காமாக்ஷியும் போகின்றனர்.)

பாலு : டேய் அங்கே வலிக்குது !

தரு : இங்கேயா ? ஐயோ ? ஒரு எலும்பவே காணோம் !

பாலு : நான் நினைக்கின்றேன்...சண்டை போட்டுக்கிட்டு இருக்கிறப்போ அம்மியவோ, குழவியவோ போட்டு அடிச்சிருப் பானோ ? இல்ல ஓடியாந்து இடிச்சிருப்பானோ ?

தரு : அப்படி இருக்காதுன்னு நான் நிலைக்கிறேன்.

பாலு : நீஎன்னடா நினைக்கிறது? அடிவாங்கினது நானுல்ல?

தரு : கொஞ்சம் உத்தரவு தர்ரிங்களா ?

பாலு : எதுக்கு ?

தரு : உட்கார !

பாலு : உட்காரு !

தரு : நல்ல வேலே பெருங்காயமில்ல !

பாலு : நீ என்ன சாம்பாருக்கு தாளுதமா செய்யப்போற? யார்ரா இவன் ! ஒரு டப்பா வாங்கிக்கயேன்.

தரு : வெளிக்காயமில்ல ! உள்காயமா இருக்குதுன்னு சொல்றேன். சார், நான் சொல்றனேன்னு வருத்தப்பட்டுக்கிடக் கூடாது !

பாலு : டேய் ! ஒத்தடம் கொடுக்க முந்தி ஆளேக்கொன்று விடுவ போல இருக்கே !

தரு : நான் சொல்றனேன்னு கோபிச்சுக்கிடப்படாது. இவ்வளவு கஷ்டப்பட்டு பஸ்ட் கிளாஸில் பட்டணம் போயி அடி வாங்கிக்கிட்டு வந்திருக்கிங்களே...எங்கிட்ட சொல்லியிருந்தீங் கன்ணு இங்கேயே கொடுக்கிறதுக்கு எற்பாடு செய்திருப்பேனே !

பாலு: நீ என்னடா சொல்றது? அடி வாங்குறதுலே மெட்ரூஸ் வேறே மைசூர் வேறையா? எந்த இடத்திலேயும் ஒரே அடிதான் ! ஒரே வலிதான் !

தரு: அதுக்காக சொல்லல இப்ப! உங்களோடே சேர்ந்தல்லவா எனக்கு இந்தக்கெட்ட பேரு !

பாலு : வருமா ? வரவிடுவானு? ஒத்தடம் கொடு !

லலி : [வந்து] தவுடு இல்லேங்க!

பாலு : என்ன! தவுடு இல்லேயா? ஏண்டி ஒரு மூட்டை தவிடையும் நீ கரைச்சா குடிச்ச?

தரு : இல்ல, தீர்ந்து போயிருக்கும்!

பாலு : தீர்ந்து போயிருக்குமா?

தரு : ஆமா! அஞ்சு பேருக்கு சப்ளை செய்யணும் பாருங்க!

பாலு : எப்படிடா?

தரு : ஆமா! நாலு எருமை மாடு, நீங்க......!

பாலு : போடி! போ!

தரு : என்னத்தைச் சொல்லுங்க.........உங்கமேல வருத்தம் வருத்த்ந்தான்! அவன் அடிக்கிறவரைக்கும் நீங்க சும்மா இருந்திருக்கீங்க பாருங்க!

பாலு : நானு சும்மா இருப்பேன்! நான் அடிக்க! அவன் அடிக்க! நான் அடிக்க! அவன் அடிகக! அவன் அடிக்க!

தரு : ஆ! அப்ப நீங்க ஒரு அடிகூட அடிக்கலேயா?

பாலு : இப்ப நான் என்ன சொன்னேன்?

காமா : பாலு! கீழே சேகர் வந்திருக்கான்!

பாலு : சேகரா! (எழுந்திருக்கிறுன்)

தரு : இந்தாங்க! வேண்டாஙக! இனிமே அடி தாங்காது! நமக்கு இது தகுதியில்ல!

(புறப்படுகிறுன் பாலன். காமாக்ஷியும், தருமனும் தடுக்கிறுர்கள்)

* * *

[பாலு கள்ளநோட்டு அடித்த குற்றத்திற்காக கைதுசெய்யப் படுகின்றுன். கூட தருமனும் கைதுசெய்யப்படுகின்றுன்.]

## (போலீஸ் ஸ்டேஷனில்)

பாலு : (அங்கு மாட்டப் பட்டுள்ள திருடர்கள் படத்தைப்பார்த்து) டேய், நம்ம போட்டோ இதுல இருக்குமோ?

தரு : இப்பத்தான வந்திருக்கிறோம். இன்னும் பிளாக் வந்திருக்காது! ஒரு வேளை அகில உலகம் இதுல இருக்குமோ?

பாலு : அஞ்சாவது போட்டோ!

தரு : அதான் வந்திருச்சே! ஸ்டேஷனுக்குள்ளேயே வந்தாச்சு! விலங்கு வேறே போட்டிருக்கோம்.

பாலு : பைத்தியக்காரா! இத்த விலங்கைப் பற்றி கேவலமா சொல்றியே! கலியாணம் செஞ்சுக்கிறபோது பெரியவக சொல்வாக கால் விலங்கு மாட்டிக்கிட்டான்னு! அது பெண்டாட்டி கஷ்டம்! இது போலீஸ் கஷ்டம்!

தரு: ஏங்க!

பாலு: இன்னுமா? அதான் ஏங்கிக்கிட்டிருக்கிறமே!

தரு: அதுக்கில்லேங்க! ஒரு ஏழு எட்டு வருஷமாவது...

பாலு: .........ம்......நம்ம நடத்தையைப் பார்த்து குறைச்சிடுவாக!

இன்ஸ்: டேய்! இங்கேவா!

பாலு: உன்னேய கூப்பிடுருக!

இன்ஸ்: டேய் உன்னேத்தாண்டா!

தரு: என்னேய எதுக்குக் கூப்பிடுருக?

இன்ஸ்: டேய்! இங்கே வரமாட்டே?

தரு: உங்களேத்தான் கூப்பிடுருக! நீங்க போங்க, நான் உட்கார்ந்து பேசிக்கிட்டிருக்கேன்.

இன்ஸ்: பேர் என்ன?

பாலு: கே. டி. இல்ல. டி. கே. பாலன்!

இன்ஸ்: ஒழுங்கா உண்மையைச் சொல்லு!

பாலு: கொஞ்சமா சொல்லட்டுமா பூரூவும் சொல்லட்டுங்களா?

இன்ஸ்: டேய்!

பாலு! சரி சொல்லிடுறேனுங்க! சின்ன வயசுலேயிருந்து பணத்துல ரொம்ப ஆசைங்க எனக்கு! பணம்னு யாருக்குத்தான் ஆசை இல்லேங்க? ஏங்க? மாமனருகிட்ட கேட்டும் கேட்காமலும் எடுத்துச் செலவழிச்சனுங்க! அப்புறம் அவருக்குத் தெரிஞ்சு போச்சுங்க! அவர் மகன் சேகருக்குக் கெடுதல் பண்ணினலாவது பணம் கொடுப்பார்னு நினேச்சு கெடுதல் பண்ணுனேம். ஒன்றும் நடக்கலே. கையிலே காசு இல்லே. இவ்வளவு பெரியமனுஷன் எப்படிங்க கையில காசு இல்லாம இருக்க முடியும்? நீங்களே சொல்லுங்க! கடைசியில மெட்ருசுக்கு வந்து சேர்ந்தோம். சேர்ந்த இடத்திலே இந்த அகில உலகம் வந்து சேர்ந்தான். கொஞ்ச நாள் கழிச்சு இந்த அகில உலகம் நோட்டு அடிக்கலாம்னு சொன்னுன். இதுல என்ன தவறு இருக்கப்போகுதுன்னு அடிச்சோம். நோட்டு நிறைய சேர்ந்து போச்சு. அப்புறம் மாத்தலாம்னு சொன்னுன். இதுல என்ன தவறு இருக்கப் போகுதுன்னு மாத்துனேம். அப்புறம்.........

தரு: அப்புறம் இது எல்லாத்துக்கும் தெரிஞ்சிபோயி எசமான் நீங்க கூப்பிடுறிங்கன்னு சொன்னுக. இதுல என்ன தவறு இருக்கப்போகுதுன்னு வந்துட்டோம்!

பாலு: உண்மையைச் சொல்லிட்டோம். நாங்க போயிட்டு வர்ரோம். வணக்கம்!

இன்ஸ்: டேய்! எங்கடா போறீங்க? இவங்களே லாக் அப்லபோடு.

பாலு: சார்! உண்மையைச் சொன்னு விட்டுடுவீங்கன்னு நினைச்சுல்ல உண்மையைச் சொன்னேம், நீங்க உள்ளே தள்ளுறீங் களே! இப்படித் தெரிஞ்சிருந்தா பொய்யே சொல்லிட்டு உள்ளே போயிருப்பமே! அதான் உண்மைக்கு காலமில்ல! அடகடவுளே!

* * *

## மாப்பிள்ளையில்...

[உதைக்கு பயந்து உண்மையை மறைத்த ஜோசியர் சுப்பையா பிள்ளையாக]

(நளினியின் குழந்தை செல்வராஜனுக்கு ஜாதகம் கணிக்கப் படுகின்றது.)

சுந்: சுப்பையா பிள்ளே! என்ன பேசாமெ இருக்கீங்க? கொழந்தை பொறந்த நேரம் நல்ல நேரந்தானே?

ஜோசி: நீங்க ஒண்ணு, பொறந்த நேரம் நல்ல நேரந்தான்...

கண்: உம்...அப்புறம்?

ஜோசி: ஹூம்...இதுவே சிம்ம லக்னமா இருந்தா ராஜயோ கத்திலே இருக்க வேண்டியது.

பெரி: அட, அதைப்பத்தி இப்ப என்னுங்க? உள்ள லக்க னத்தை ஒழுங்கா கவனிச்சு சொல்வீங்களா?

ஜோ: நீங்க ஒண்ணு, சொல்ற மாதிரி எதுவும் இல்லையே!

பார்: ஏன்?

ஜோசி: நீங்க ஒண்ணு, அந்த மாதிரி அமைஞ்சிருக்கே கிரக மெல்லாம்...ஜென்மத்திலே குரு, அஷ்டமத்திலே சனி, போதாக் குறைக்கு பாதகாவபதி பக்கத்திலேயே இருக்கான். இன்னும் என்ன வேணும்?

சுந்: சுப்பையா பிள்ளே! அதனுலெ ஒண்ணும் பயமில் லையே?

ஜோசி: நீங்க ஒண்ணு. பயப்பட வேண்டிய விஷயம்தான்... இருந்தாலும் பயமில்லே.

கண்: எப்படி? சாதாரணமா?

ஜோசி: அதாவது இப்ப கிரகம் இருக்கிற இருப்பிலே அஞ்சு வருஷம் வரைக்கும் ஆபத்துதான். ஆமாம்!

பெரி: யாருக்கு கொழந்தைக்கா?

ஜோசி: நீங்க ஒண்ணு! கொழந்தைக்கு, தாய்க்கு, இன்னும் சொன்னு குடும்பத்துக்கே ஆபத்துதான், ஆமாம்.

கண் : அய்யய்யோ, அப்புறம் சாதாரணமா ரொம்ப பயங்கர மால்லே சொல்றீங்க ?

பெரி : எங்க இதுக்கு ஒண்ணும் சாந்தியில்லையா ?

ஜோசி : சாந்தியாவது, பூந்தியாவது? நீங்க ஒண்ணு ! வேணும்னு ஒண்ணு செய்யலாம்.

சுந் : என்ன செய்யலாம்?

ஜோசி : இந்த அஞ்சு வயசு வரைக்கும் ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்க்காதபடி தாயும் குழந்தையும் தனித் தனியா பிரிச்சு வச்சா உயிருக்கு ஆபத்து வராது. இல்லே, டேஞ்சர் தான்.

* * *

[விஜயாவிற்கும் டாக்டருக்கும் கல்யாணம் நிச்சயிக்கப்படுகின்றது.]

டாக் : .........ஆனல் ஒன்று சக்கரையும் சுலோவும் இல்லை யென்றால் இந்தச் சம்பவம் மங்களமாக முடிந்திருக்காது. ஆகவே நான் நெடுநாளாக நினைத்திருந்தபடி அவர்கள் திருமணத்தையும்......

சக் : அதே பந்தல்லே முடிச்சிடலாம்னு சொல்றீங்களா ? உம்......இதிலே அர்த்தமிருக்குங்க.

தண் : நல்லாச் சொன்னே. எஜமான் ! அப்படியே முத்தம்மா கல்யாணத்தையும் முடிச்சிட்டா ?

பெரி : ஆ......முத்தம்மாளுக்கா ?

சந் : அதிலே பாருங்க...பச்சையா சொல்றதுக்கு வெட்கப் பட்டுக்கிட்டு பக்கத்து எலேக்குப் பாயாசம் போடச் சொல்ருன். எண்டா கவலைப்படாதே முடிச்சுடலாம்.

ஜோசி : நீங்க ஒண்ணு. உங்க இஷ்டத்துக்கு முடிவு பண்ணி விட்டீங்களே. பொருத்த நிமித்தமெல்லாம்...

கண் : தேவையில்லே. உங்க ஜோசியத்தை நம்பித்தான் இவ்வளவு கலாட்டா ஆயிடுச்சே. இன்னும் இவுங்க வேறே அனுப விக்கணுமா ?

ஜோசி : நீங்க ஒண்ணு. நான் ஒதைக்குப் பயந்துகிட்டு அப்போ ஒளறிக் கொட்டிட்டேன். அது என்னடான்னு கடைசியிலே கதை இப்படி முடிஞ்சிடுத்து. உம்...சரி முகூர்த்த நாளாவது பார்த்திட்றேன்.

* * *

வி. சுப்புராயலுநாயுடு பிரஸ், மதுரை-55

## கைவசம் உள்ள வசனப்புத்தகங்கள் !

- எல்லாம் இன்பமயம்
- முதல் தேதி
- வள்ளியின் செல்வன்
- மிஸ்ஸியம்மா
- போனமச்சான்
- ரத்தக்கண்ணீர்
- அம்மையப்பன்
- தூக்கு தூக்கி
- பெண்
- மலைக்கள்ளன்
- மனோகரா
- தேவதாஸ்
- ஜெயகோபி
- முல்லைவனம்
- நல்லபிள்ளை
- காவேரி
- குடும்பம்
- அவன் யார்?
- வைரமாலை
- கூண்டுக்கிளி
- சொர்க்கவாசல்
- இல்லறஜோதி
- நால்வர்
- ஔவையார்
- நல்லவன்
- கதாநாயகி
- நல்லதங்கை
- எதிர்பாராதது
- நண்பன்
- என்மகள்
- ரத்தபாசம்
- மாங்கல்யம்
- துளிவிஷம்
- பொன்வயல்
- கண்கள்
- அவன்
- திரும்பிப்பார் பணம் நாம் பராசக்தி

★ தங்கவேலுவின் ஹாஸ்ய வெடிகள்

❀ ஒவ்வொன்றும் விலை 8 அணா தான்.

❀ ஏஜண்டுகளுக்கு நிறைந்த கமிஷன்—மலிவான விலை விசேஷமான சலுகைகள்—விளம்பர சாதனங்கள் வேண்டியளவு அனுப்பப்படும்.

❀ தனிப்பிரதி வேண்டுவோர் பிரதிக்கு அணா 8 விதம் மணியார்டர் அனுப்பவேண்டும்.

❀ வேறு எங்குமே இவ்வளவு புத்தகங்கள் சேர்ந்தவாக்கில் கிடைக்காது.

பொன்னான சந்தர்ப்பம்! உடன் எழுதுக ஆர்டர்!!

# ரதி பதிப்பகம்

127, தெற்கு ஆவணி மூலவீதி,

**மதுரை**